www.tamilarangam.net






ஈழப்போராளி

1986 கார்த்திகை-மார்கழி வெளியீடு-2

# ஈழம் முழுவதும் விடுதலைப்போர் உக்கிரம்

## எதிரிப்படை அனைத்தையும் முகாம்களுக்குள் அடைத்து மக்களைப் பாதுகாக்கும் முனைப்புடன் மக்கள் விடுதலைப் படை (PLA)




திருகோணமலை, வன்னி, முல்லைத்தீவு, யாழப்பாணம், மட்டக் களப்பு எங்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப்படையானது எதிரிப்படைகளுக்கெதிரான போரை உக்கிரப் படுத்தியுள்ளது.

யாழப்பாண மாவட்டத்தில் மட்டுமல்லாது ஈழம் முழுவதும் உள்ள சிறீலங்கா அரசு படைகளை முகாம்களுக்குள் அடைத்து வெளியேற முடியாதபடி செய்து மக்களைப் பாதுகாத்தல் என்னும் அடிப்படையில் தற்காப்புப் போர் முறையை மக்கள் விடுதலைப்படை பரவலாக்கியுள்ளது.

அரசுக்கெதிராக மலையக மக்கள் வெவ்வேறு சுலோகங்களை முன்வைத்துப் போராடி வருகின்றார்கள். மலையகத்தின் சூழலைப் புரிந்து கொண்டு அதற்கேற்றபடி மறைவாகவும் பரவலாகவும் ஆழமாகவும் கால்களை நிலைப்படுத்தி வருகின்றார்கள் எமது வீரர்கள். குமுறும் எரிமலையாக இருந்து வரும் மலையகம் வெடித்துக் கிளம்புகையில் எமது மக்கள் படையின் ஆற்றல் வெளிப்படும்; போராளிகளின் முகத்திரைகள் கிழிக்கப்படும். ஆகாவென்றெழுந்தது பார் ஈழத்தின் யுகப்புரட்சி என அப்போது தெரியும். ...ாகவே

தனது தந்திரம் அனைத்தும் தோல்வியுற்ற நிலையில் ஈடு... முடியாத சிறீலங்கா அரசு, உலகம் முழுவதும் ஆதரவு தே... மக்க... அலைகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியமும் இஸ்ரேல், பாகி... தென்னாபிரிக்கா, தென்கொரிய பிற்போக்கு ஆட்சிகள் தமது இ... உதவியை வெளிப்படையாகவே நடத்தப்போகின்றன. ...ர்கள்.

மரணசேடம் இழுக்கும் ஜெயவர்த்தனா அரசாங்கம் ஆ... கீழே போடும்படி எம்மைப், பார்த்து அலறுகிறது.

ஈழம் முழுவதும் ஒரே நேரத்தில் எதிரிப்படைகளை அடக்கும் போரைத் தொடுத்து மக்களைப் பாதுகாக்கும் வல்லமை பெற்றது மக்கள் விடுதலைப் படை என்பதை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது நடைமுறைகள் மூலம் நிரூபித்திருக்கின்றது.

மக்களோடு இணைந்து மாபெரும் சக்தியாக வளர்ந்துள்ள மக்கள் விடுதலைப் படையானது எதிர்நோக்கும் பொருள் வளப் பற்றாக் குறையானது, அதன் போர் ஆற்றலை முழுமையாக வெளிப்படுத்த முடியாத வகையில் மட்டுப்படுத்தும் காரணியாகத் தொழிற்படுகின்றது. என்பதுவும் இங்கு குறிப்பிடப்படுவது அவசியமாகும்.

**படைக்கான ஆற்றலைப் பெருக்குவோம்**
**மக்களைப் பாதுகாப்போம்**
**வெற்றியை நோக்கி**
**விரைவாக முன்னேறுவோம்.**



**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1986 கார்த்திகை-மார்கழி 

# குறிஞ்சிச் சாரல்

## மலைகளை உடைக்கும்
## நதிகள்
## சமவெளி அடையும்.

*(இந்த இதழ் குறிஞ்சிச் சாரல் பகுதியில் தமிழ்நாட்டு அன்பர்களிடமிருந்து வந்த இரண்டு கேள்விகளுக்கு-கொஞ்சம் விரிவாகவே-பதிலளித்திருக்கிறோம். இலங்கையின் மலையகப் பகுதிகளில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் குறித்த கேள்விகள் தமிழ்நாட்டு மக்களிடம் நிறையவே உண்டு. ஈழப்போராட் டத்தில் அவர்கள் நிலை என்ன? அந்த மக்கள் மத்தியில் ஈழப்போராளிகளுக்கு ஆதரவு இருக்கிறதா?... போன்ற பல சந்தேகங்களோடு வருகிற முகங்களை நாங்கள் அடிக்கடி சந்திக்கிறோம்.*

*மலையக மக்கள், தாம் வாழ்கின்ற நிலத்தில் சுதந்திரமுடன் தொடர்ந்தும் வாழ்வதற்குப் பூரண உரிமையுடையவர்கள் என்பதிலும், எங்கள் போராட்ட மானது அவர்கள் அவ்வாறு வாழ்வதற்கு வழி செய்வதாகவும்தான் இருக்க வேண்டுமென்பதிலும் நாங்கள் உறுதியோடிருக்கிறோம்.)*

கேள்வி 1 : மண்ணின் மைந்தர்கள் எனப்படுகின்ற பாரம்பரியத் தமிழர்கள், கடந்த காலத்தில் இந்திய வம்சாவளித் தமிழர்களை சமூகரீதியில் கீழ்த்தரமாகக் கருதி வந்ததினாலேயே, இந்திய வம்சாவளித் தமிழர்கள் ஈழப்போராட்டத்தை ஆதரிக்க மறுக்கிறார்கள் என்று கூறப்படுகிறதே, அது உண்மையா?

பதில் : இக்கேள்விக்கான பதிலைக் கூறப்புகுமுன், ஒரு விடயத்தைக் கூறவேண்டியது அவசியமாக உள்ளது.


இந்திய வம்சாவளித் தமிழர்கள் என்று அழைப்பதை நாம் ஏற்றுக்கொள் வதில்லை. அவர்கள் ஈழதேசத்தின் பிரஜைகள். அவர்கள் மலைகளைச் சார்ந்து ...னால் 'மலையகத் தமிழர்கள்' என்றே அழைப்போம்.

...யகத் தமிழர்கள், ஈழப்போராட்டத்தில் ஈடுபடுவது இன்னும் பரந்த ... வெளிப்படவில்லை என்பது உண்மையே தவிர, அவர்கள் ...ராட்டத்தை ஆதரிக்க மறுக்கிறார்கள் என்று கூறப்படுவது உண்மை அல்ல.

...பரியத் தமிழர்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் இடையே ...சியல் பொருளாதார இடைவெளியை வைத்துக்கொண்டு, மலையக ...தியில் இருக்கும் பிற்போக்கு சக்திகள் மேலே கோரப்பட்டவாறான ... எழுப்பினார்கள் என்பதே உண்மையாகும்.

...பகத்தில் உத்தியோகம் பார்த்த, வியாபாரம் செய்த பாரம்பரியத் ...ற் சிலர், அங்கு பிற்போக்குத் தனமாகக் கடந்த காலத்தில் நடந்து ...ர்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், ...தை வைத்துக்கொண்டு அதனை மிகைப்படுத்தி மக்களுக் கிடையே பிளவுகளை உருவாக்க முற்பட்டவர்கள், மலையகத்தில் மக்களை ஏமாற்றிப் பிழைத்து வந்த சில பிற்போக்கு சக்திகளே தவிர பரந்துபட்ட மலையக மக்களல்ல.



இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள், பாரம்பரியத் தமிழர்கள்—மலையகத் தமிழர்கள் என்ற வேறுபாடின்றி மொத்தமாக இனரீதியில் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள்.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியைப் பொறுத்த வரையில், அது பிரதேசத்துக்குப் பிரதேசம் அளவுரீதியிலும் பண்புரீதியிலும் வித்தியா சங்களைக் கொண்டிருக்கிறது.

மலையகத்தில் நிலவுகின்ற அரசியல் பொருளாதார இராணுவச் சூழ்நிலை கள் காரணமாக, மலையகத்தில் ஈழவிடுதலைப் போராட்டத்தின் அளவு குறைவாகத் தோற்றமளிக்கின்றது.

பிற்போக்குத் தொழிற்சங்கங்கள் அங்கு மலையக மக்களின் புரட்சிகரமான அரசியல் உணர்வுகளுக்கு எதிரானதாக தொழிற்பட்டு வருகின்றன. தோட்ட நிர்வாகங்கள் அரசபடைகளோடு மிகவும் நன்கு ஒத்துழைத்து வருகின்றன.

மலையக மக்கள் மத்தியிலிருந்து எழுகின்ற புரட்சிகர சக்திகளை அடக்கியொடுக்கி அழித்துவிட முயல்வதில், பிற்போக்குத் தொழிற்சங்கத் தலைமைகள், தோட்ட நிர்வாகம், அரசபடைகள் மற்றும் அரச நிர்வாகங்கள் ஆகிய மூன்றும் நன்கு ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. இதனால் ஈழவிடுதலைப் போராட்டம் அங்கு பரவியிருக்கும் தன்மையானது, ஏனைய ஈழப்பகுதிகளில் வெளிப்படையாக இயங்கி வருவதுபோல, அங்கே இயங்க முடியாத சூழல் வேறுபாடு காணப்படுகின்றது.

ஈழவிடுதலைப் போராட்டம் தொடர்பாக மலையகத்திலும் பல நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. மலையக இளைஞர்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு, இன்னும் சிறையிலடைக்கப்பட்ட நிலையில் உள்ளனர். மலையக மக்கள், ஈழவிடுதலை தொடர்பாகக் கைதுசெ ய்யப்பட்ட மலையக இளைஞர்களை விடுதலை செய்யும்படி சிறீலங்கா அரசுக்கு எதிராகப் பல போராட்டங்களை நடத்திருக்கின்றனர்; இன்னும் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

மலையக மக்களின் நல்வாழ்வுக்கு ஈழப்போராட்டம் வழியாகாது என்று கூறும் தொண்டமான்கூட, ஈழப்போராட்டத்திற்கு எதிராகச் செயற்பட முடியாத சூழ்நிலை மலையக மக்கள் மத்தியில் காணப்படுவதையும் நாம் அவதானிக்கலாம்.

மலையக மக்கள், ஈழப்போராட்டத்தை ஆதரிக்க மறுக்கிறார்கள் என்றால், ஜெயவர்த்தனா அரசாங்கம் தொண்டமானின் ஊடாக மலையக மக்களைக் கொண்டு, ஈழப்போராட்டத்திற்கு எதிராக எத்தனையோ காரியங்களைச் சாதித்திருக்க முடியும்.

ஜெயவர்த்தனா அரசாங்கம், அதற்காகப் பல தடவைகள் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டது. ஆனால், அது தோல்வியையே கண்டது.

மலையக மக்கள் மத்தியில் இன்று ஆழமாக வேரோடிக் கொண்டிருக்கின்ற ஈழவிடுதலைப் போராட்டமானது வெடித்துக் கிளம்புகின்ற போதுதான் — மலையக மக்கள் எவ்வாறான உணர்வோடு செயற்பட்டுக் கொண்டிருக் கின்றார்கள் என்பதை அனைவரும் காணமுடியும்.

*கேள்வி 2 : மலையகத் தமிழர்களிற் சிலர், யாழ்ப்பாணத் தமிழர்களை வெறுக்கின்ற நிலைமை காணப்டுகிறதே, அது ஏன்?*

*பதில் : பதிலுக்குப் போவதற்கு முதல் ஒரு விளக்கம் :*

*பாரம்பரியத் தமிழர்கள் என்பதற்குள் யாழ்பாணத் தமிழர்கள் என்பதுவும் உள்ளடங்கும். அத்துடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பிரதேசங்களிலுள்ள தமிழர்களும் பாரம்பரியத் தமிழர்கள் என்பதனுள் உள்ளடங்குவர்.*

*மலையகத் தமிழர்களிற் சிலர் யாழ்ப்பாணத் தமிழர்களை வெறுக்கின்ற நிலைமைக்கு, ஒரு பக்கம் குறிப்பிடத்தக்க சில உண்மையான காரணங்கள் உள்ளன.*

அதே வேளையில் பிற்போக்கு சக்திகளினால் மேற்குறிப்பிட்ட இரு பிரதேசமக்களையும் பிளவுபடுத்தும் நோக்குடன் பொய்யான முறையில் பரப்பப்பட்ட கருத்துகளும் காரணமாகும்.

உண்மையான காரணங்களை நாம் பின்வருமாறு கண்டுகொள்ளலாம் :

(1) மலையக மக்களும் யாழ்ப்பாணத்து மக்களும் வெவ்வேறுபட்ட இரண்டு பிரதேசங்களில் வாழ்கின்றமை;

வேறுபட்ட பொருளாதார அடிப்படையைக் கொண்டிருக்கின்றமை;

புவியியற் பொருளாதார சமூகக் காரணங்களினால் சமூக உறவுகள் பெருமளவு ஏற்படாமை.

(மலையக மக்கள் காலனித்துவத்தினால் நூற்றாண்டுகளுக்கு மேலாக அதீத சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்டதனால், யாழ்ப்பாண மக்களுக்கும் மலையக மக்களுக்கும் இடையிலான பௌதீக வாழ்க்கைத்தர இடை வெளி மிகப் பெரியதாகக் காணப்படுகிறது).

(2) 1948-49-ல் மலையக மக்களின் குடியுரிமை வாக்குரிமை பறிக்கப்பட்ட தோடு, பாரம்பரிய தமிழர்கள் மத்தியிலிருந்த பாராளுமன்ற அரசியல் வாதிகள் மலையக மக்களிடம் வாக்குரிமை இல்லாததினால், மலையக மக்கள் மத்தியில் கட்சி அரசியல் இயக்கம் நடத்துவதில் அக்கறை காட்டவில்லை.

அதேபோல் மறுபுறம் தோட்டத் தொழிற்துறையினுள் பின்னிப் பிணைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள் மத்தியில் தொழிற்சங்கம் நடத்தி வந்த தொண்டமான போன்ற தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிற்சாலை அமைப்போ பெருந்தோட்டத்துறையோ இல்லாது உதிரிப் பொருளாதாரத் தன்மை கொண்ட பாரம்பரியத் தமிழர்கள் மத்தியில் தொழிற்சங்க அரசியல் நடத்த முன்வரவில்லை.

இதனால் கடந்த 40 ஆண்டு காலமும் இருபகுதி மக்களினரிடையேயும் அரசியல் ரீதியான பிணைப்பு ஏற்படுத்தப்பட வேண்டிய அவசியம், தமிழ் மக்கள் மத்தியிலிருந்த முதலாளித்துவத் தலைமைகளுக்கு ஏற்படாமல் போய்விட்டது.

(3) யாழ்ப்பாணத் தமிழர்கள் பற்றி மலையகத் தமிழர்களுக்கோ, மலையகத் தமிழர்கள் பற்றி யாழ்ப்பாணத் தமிழர்களுக்கோ பெருமளவு நேரடியாக அரசியற் பொருளாதார சமூக உறவுகள் இருக்கவில்லை.

யாழ்ப்பாணத் தமிழர்கள் சிலர் மலையகத்தில் கடை வியாபாரம் செய்தார்கள். சிலர் அதிகாரிகளாகவும், ஆசிரியர்களாகவும் வேலை செய்து வந்தார்கள். இவ்வாறு அங்கு சென்ற யாழ்ப்பாணத்துத் தமிழர்களைப் பற்றித்தான் மலையகத் தமிழர்களுக்கு அனுபவம் உண்டே தவிர, பரந்துபட்ட யாழ்ப்பாண மக்களோடு மலையக மக்களுக்கு நேரடி அனுபவம் கிடையாது.

கடை வியாபாரம் செய்வதற்கும் உத்தியோகம் பார்ப்பதற்கும் சென்ற யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் இடையே ஏற்பட்ட உறவு என்பது வெவ்வேறுபட்ட வர்க்கங்களுக் கிடையேயான உறவே ஆகும்.

கடை வியாபாரி என்பவன் உலகத்தின் எந்தப் பகுதியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் சரி சுரண்டுதலும் ஏமாற்றுதலுமே அவனது தொழிலின் அடிப்படையாகும்.

அதிகாரிகள், தமக்குக் கீழுள்ள தொழிலாளர்களோடு கொண்டுள்ள உறவு என்பது முதலித்துவ நிலவுடமைச் சமுதாயங்களில் பொதுவான ஒன்றே ஆகும்.

பின்தங்கிய பகுதிகளுக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்படுபவர்களில் பெரும் பாலானோர் தமது கடமையைச் செம்மையாகச் செய்வதில்லை என்பது யாழ்ப்பாண ஆசிரியர்களுக்கு மட்டுமே உரிய குணமல்ல.

மலையக மக்களிலிருந்து உருவாகிய தொழிற்சங்கத் தலைமைகள், அதிகாரிகள், முதலாளிகள், வியாபாரிகள் என்போர் மலையக மக்களுக்குச் சேவைதான் செய்கின்றார்கள் என்று யாராவது கூறினால் அது படுமுட்டாள்தனமாகும். அங்கும் சுரண்டுபவன்—சுரண்டப்படுபவன் உறவே நிலவுகிறது; ஏமாற்றுபவன்—ஏமாற்றப்படுபவன் என்கின்ற நிலைமையே காணப்படுகின்றது.

மலையக மக்களிலிருந்து ஆசிரியர்களாக உருவாக்கியவர்களில் எத்தனை பேர் மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக விசுவாசமாக உழைத்தார்கள் என்று கேட்டால், அந்த எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணிக்காட்டி இன்னார் இன்னாரென்று சுட்டிக்காட்டப்படக் கூடியதாகவே இருக்கின்றது.

(4) யாழ்ப்பாண மக்களுக்கும் மலையக மக்களுக்கும் இடையே தன்மை ரீதியான வேறுபாடு காணப்படுவதற்கு அடிப்படையான காரணம் உண்டு. அது என்னவெனில், யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத் தளமானது குட்டி முதலாளித்துவ தன்னைகளையே ஆதிக்கமுடையதாக ஆக்குகின்றது.

தொழிலாளர்களையும், பின்தங்கிய நிலைமைகளையும் மிகப்பெருமளவில் கொண்டிருக்கும் மலையக மக்கள் மத்தியில் வேறுபட்ட உணர்வுகள் மேலோங்கியிருக்கின்றன.

யாழ்ப்பாண உயர்மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், தமது வீட்டு வேலைகள் செய்வதற்கு மலையகச் சிறுவர்களையே பயன்படுத்திக் கொண் டார்கள்.

மலையக மக்களின் பின்தங்கிய நிலைமையானது, அவர்களைத் தரம் குறைந்தவர்களாகப் பார்க்கும் மனோபாவத்தை பொதுவாகப் பாரம்பரியத் தமிழர்கள் மத்தியில் உருவாக்கியது என்பதையும் மறுப்பதற்கில்லை. இவ்வாறான விடயங்கள் வர்க்கக் கண்ணோட்டத்தில் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியவையே ஆகும்.

(5) இதுவரை அவதானிக்கப்பட்ட இயல்பான காரணங்கள் உருவாக்கிய சூழ்நிலைகள் — மலையக மக்களுக்கும் யாழ்ப்பாண மக்களுக்கும் இடையே பொதுவாக சந்தேகங்கள் எழுப்பப்படுவதற்கும், தவறான அபிப்பிராயங்கள் உருவாக்கப்படுவதற்கும், பிற்போக்கு. சக்திகள் மிகைப்படுத்திய ரீதியில் மக்களைப் பிளவுபடுத்துவதற்கும் காரணமாயின.

தொடர்ச்சி 11ம் பக்கம்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இனிய தமிழ் மக்களே!...

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள் யார்?

**ஈழமக்களுக்காக புரட்சிகரமான விடுதலையை வென்றெடுக்க முன்னணியில் நின்று போராடுபவர்களே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள்...**

எங்களின் இலட்சியத்திட்டங்கள் என்ன?

எங்களின் செயற்பாடுகள் எவ்வகைப்பட்டவை?

எங்களுக்கும் ஏனைய அமைப்புகளுக்கும் என்னென்ன வேறுபாடுகள்?

போன்ற கேள்விகள் உங்கள் மனங்களில் தோன்றுவது இயல்பானதே.

நாங்கள் பாரம்பரியப் பெருமைகளைப் பேசி உங்களை ஏமாற்றுபவர்களல்ல;

எங்களைப் பற்றி பொய்யான பிரமைகளை உங்களுக்கு ஊட்டுபவர்களல்ல;

உங்கள் மத்தியில் பிரபல்யம் அடையும் குறுகிய நோக்கங்களுக்காக எங்கள் பாசமிகு தேசமக்களைப் பலி கொடுக்கும் (பணப்)புதையல் தேடிகளுமல்ல...

எங்கள் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா அவர்கள் கூறியது போல,

**''மக்களில்லாத மண்ணை நேசிப்பவர்களல்ல் நாங்கள்; மக்களை நேசிப்பவர்கள். மக்களுக்காக மண்ணை நேசிப்பவர்களே நாங்கள்.''**

'புதியதோர் உலகம் செய்வோம்' என்றார் பாரதிதாசனார்.

நாங்கள் புதியதோர் ஈழம் படைக்கப் புறப்பட்ட புதுயுகப் புரட்சியாளர்கள்;

எங்கள் தேசத்தின் விடுதலை என்பது,

எங்கள் தேசத்திலுள்ள அனைத்து மக்களுக்குமான

உண்மையான

முழுமையான

விடுதலையைக் காணப் புறப்பட்ட சமுதாயப் புரட்சியாளர்கள்.

ஈழதேசத்திலிருந்து சிறீலங்கா அரசின் கூலிப்படைகளை விரட்டுவது அல்லது ஒழித்துக் கட்டுவது,

ஈழ தேசத்தின் இறைமையை வென்றெடுக்கும் வகையில் ஈழத்தின் மீதான சிறீலங்கா அரசின் அதிகாரத்தை இல்லாமல் ஆக்குவது என்பது மட்டுமல்ல எங்கள் இலக்கு.

வெறுமனே 'ஈழம்' என்னும் பெயர்ப் பலகைக்காக

இத்தனை இழப்புகளையும்

துன்பங்களையும்

எங்கள் மக்கள் தாங்கிக் கொள்ளவில்லை.

சுதந்திர ஈழத்தில் பிற்போக்குக் கும்பல்கள் ஆதிக்கம் வகிப்பதற்காக நாங்கள் இத்துணை போராட்டத்தை நடத்தவில்லை.

ஈழம் சுதந்திரம் அடைந்ததன் பின்னரும்,

'இரவில் சுதந்திரம் வாங்கினோம் இன்னும் விடியவில்லை' என்று சோகப்பாட்டு பாட நாங்கள் தயாராக இல்லை.

சுதந்திர ஈழத்தில்—

அனைத்து ஈழமக்களுக்குமான உண்மையான ஜனநாயகம் நில்வ வேண்டும்,

அங்கு பணக்காரர்கள் ஏழைகளை ஏமாற்றும் நிலை இல்லாத நிலை வேண்டும்,

முதலாளிகள் தொழிலாளர்களைச் சுரண்டாத நிலை வேண்டும்,

நிலமுள்ளவர்கள் நிலமில்லாதவர்களை ஒடுக்கும் நிலை மாற வேண்டும்.

உயர்த்தப்பட்ட சாதியினர் தாழ்த்தப்பட்ட சாதியினர் என்னும் நிலை ஒழிய வேண்டும்,

எமது தேசத்துப் பெண்கள் விடுதலை பெற்றவர்களாக வீதிவலம் வரவேண்டும்...

இவற்றுக்காகவே நாங்கள் போராடுகிறோம்.

மூடநம்பிக்கைகளின் கூடமாக இல்லாத ஈழம் வேண்டும்.

அதேவேளை,

சமுதாயத்தின் முற்போக்கான வளர்ச்சியைப் பாதிக்காத தனிமனித சுதந்திரம் முழுமையாக நிலவ வேண்டும்.

மதவேறுபாட்டாலோ

பிரதேச வேறுபாட்டாலோ

மக்களைப் பிளவு படுத்தி மோதவிடல் என்பது இல்லாத நிலை வேண்டும்.

மதவழிபாடு என்பது தனிமனித சுதந்திரம்தான்.

ஆனால்,

மதத்தின் பேரால் மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் எத்தர் கூட்டம் இல்லாத வகையில் ஒட்டறுக்கும் ஈழம் வேண்டும்.

**இவற்றை நிலைநாட்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் இறுதி வெற்றிவரை உறுதியுடன் போராடிய தீருவோம்.**

தம்மிடமுள்ள சிறு நிலத்தில் விளையும் விளைச்சலும் போதாமல், தம் கையில் எஞ்சியவற்றையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து குடும்பத்தின் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் குடியான விவசாயிகள், எமது தேசத்து விவசாயிகளில் 80 விழுக்காடு (சதவீதம்).

இந்தக் குடியான விவசாயிகளின் குட்டிச்சுவரான வாழ்க்கையில் முன்னேற்றம் தருகின்ற ஈழம்தான் எமக்கு வேண்டும்.

மூன்று வேளை கஞ்சிக்கும் போதாத கடுகளவு கூலிக்கு, நாள் முழுவதும் தோளை முறித்து வேலை செய்யும் தொழிலாளர்களை, மூலதனத்தைக் குவித்து வைத்துள்ள முதலாளிகளின் கொடூரமான சுரண்டற் கொடுமையிலிருந்து விடுவிக்கும் சுதந்திரமே எமக்கு வேண்டும்.

## கருத்துப்பகிர்வு

வெள்ளை வேட்டி கட்டிக் கொண்டு வீதியில் திரிய வேண்டிய சமுதாயக் கட்டாயத்துக்கு உள்ளான,

குமாஸ்தாக்களும்,

ஆசிரியப் பெருந்தகைகளும்

இயந்திரம்போல் வேலை செய்தும், அவர்கள் வாழ்க்கையில் நிலைமாறா நிலை மாற்றும் தேசம் வேண்டும்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்',

என்று, அறைகூவினானே பாரதி.

அவன் கனவுகள் ஈழத்தில் உண்மையாகும் நாள் வேண்டும்.

### அன்புக்குரிய எமதினிய தமிழ்மக்களே!

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் சுரண்டலுக்கும் ஒடுக்கு முறைக்கும் உள்ளாக்கப்பட்ட தொழிலாளர் விவசாயிகளின் பிள்ளைகள் நாங்கள்.

இன்று எங்கள் கைகளில் ஆயுதங்கள்.

அவை எதற்காக?

சுரண்டலும் ஒடுக்கு முறையும் இனியும் தொடர வேண்டும் என்பதற்காகவா...

இல்லவே இல்லை... அந்நிலைன்மயை மாற்றியமைப்பதற்காகவே.

ஒரே தமிழினத்தை நாங்கள் என்றைக்கும் பார்த்ததில்லை.

சுரண்டும் தமிழினம்,

சுரண்டப்படும் தமிழினம்

என இரண்டு தமிழினத்தைத்தான் இத்தனை ஆயிரம் ஆண்டு காலமாகப் பார்த்திருக்கிறோம்.

சுரண்டும் தமிழினத்தார் எங்களை ஏமாற்றுவதற்காக எத்தனை ஆயிரம் வேடங்களைப் போடுவார்கள் என்பதைப் பார்த்துப் புரிந்து விட்டோம்;

எத்தனை நூற்றுவகையான நாடகங்களை நடத்துவார்கள் என்பதை நாங்கள் கண்டு பழகிவிட்டோம்.

இனியுமா எங்களை ஏமாற்ற முடியும்?

நாங்கள் ஒரே தமிழினம் என்னும் உணர்வு உருவாக வேண்டும் என்று விரும்புகிறோம்

அது எப்படி?

சுரண்டப்படும் தமிழினமாகிய நாங்கள், எங்கள் மீது சுரண்டும் தமிழினத்தார் தொடர்ந்தும் சுரண்டிக் கொண்டிருக்க...

நாங்கள் அதை மறந்துவிடுவது போல் எங்களை நாங்களே ஏமாற்றிக் கொள்ளும் வகையால் அல்ல.

மாறாக,

சுரண்டும் தமிழின் - சுரண்டப்படும் தமிழன்

என்னும் நிலையை இல்லாமல் ஒழித்துக்கட்டுவதன் மூலமாகவே ஒரே தமிழினம் என்னும் உணர்வும்,

அதன் அடிப்படையிலான உண்மையான ஒற்றுமையும் நிலவும் என்று கூறுபவர்கள் நாங்கள்.

அந்த வகையிலான தமிழின ஒற்றுமையை நிலைநாட்டும் சமதர்ம ஈழத்துக்காகப் போராடுபவர்களே நாங்கள்.

அறா வட்டிக்காரன்,

சாராய வியாபாரி,

கள்ளக் கடத்தல்காரன்,

அதிகார மோசடிக்காரன்,

ஊரை ஏமாற்றிக் கொள்ளையடிப்போன்...

இவர்கள் தான் சமுதாயத்தில் பெரியவர்கள்! இவர்கள் தீர்மானப்படிதான் சமுதாயத்தில் சட்டமும் நீதியும் நிர்வாகமும் செயற்படும் என்னும் நிலையை அறவே ஒழித்துக்கட்டும் நோக்குடன் நாங்கள் படை நடத்துகிறோம்.

நாங்கள் மேற்குறிப்பிட்ட அயோக்கியர்களின் அடிதடியாட்கள் அல்ல.

அவர்களைப் பாதுகாப்பதுவும் அவர்களுக்கு வக்காலத்து வாங்குவதுவும் எமது தொழிலல்ல.

துஷ்டநிக்கிரகம் செய்வது எங்கள் வரலாற்றுக் கடமை.

துஷ்டர்கள் யாராயிருந்தாலும்,

துஷ்டத்தனம் எந்த வடிவில் வந்தாலும்

எங்கள் கைகளிலுள்ள ஆயுதங்கள் இயல்பாகவே குறிபார்க்கும்.

நாங்கள் எமது தேசத்தின் பரந்துபட்ட மக்களுக்குக் கட்டுப்பட்டவர்கள்.

மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பவர்கள்.

நாங்கள்,

தவறுகளே விடாத-விடமுடியாத அதீதப் பிறவிகள் அல்ல.

ஆனால்,

தவறு என்று காண்கின்றபோது-மற்றவர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றபோது திருத்திக் கொள்பவர்கள்.

**தவறுகளைக் கண்டறிதல், சுயவிமர்சனம் விமர்சனத்துக்கு உட்படுத்துதல், சரியான திசை நோக்கி முன்னேறுதல் என்னும் இயங்கியற் பொருள்முதல் வாதத்தின் வழியில் செயற்படுபவர்கள் தான் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள்...**

எங்கள் ஒவ்வொருவரினதும் கைகளிலுள்ள துப்பாக்கிகள்,

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்னும் ஸ்தாபனத்தின் ஜனநாயகபூர்வமான முடிவுகளால் வழிநடத்தப்படுகின்றன.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், ஆத்திரங்கள், பொறாமைகளினால் வழிநடத்தப்படுபவர்களல்ல.

தோழர்கள் யார்?

நண்பர்கள் யார்?

பகைவர்கள் ய்ார்?

என்பதுபற்றி எமக்கு அரசியற் கோட்பாடு உண்டு.

அதன் வழியினின்று வழுவாத செயற்பாடுண்டு.

'மற்றவர்கள் குழு அமைத்துப் போராடுகின்றார்கள். அதுபோல் ஒரு தனிக்குழுவாக நின்று நாங்களும் போராடுகின்றோம்' என்னும் போட்டிக்கடை மனோபாவம் உடையவர்களல்ல நாங்கள்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது வரலாற்றுக் கட்டாயத் தேவைகளினால் உருவாக்கப்பட்ட சக்தியாகும். அதற்கென திட்டவட்டமான வரலாற்றுக் கடமைகள் உள்ளன.

**அந்தக் கடமைகள் நிறைவேறும் நாள்வரை—**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மாபெரும் சக்தியாக மேலும் மேலும் வளர்ந்தே தீரும். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மக்களே தேசம்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் க. பத்மநாபா அவர்கள் 22.08.86 அன்று பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தி அறிக்கை :

இந்திய அரசாங்கம், பேச்சுவார்த்தை மூலம் ஓர் அரசியற் தீர்வைக் காணத்தன்னாலான நல்லெண்ண முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டிருக்கும் அதே வேளை—

ஜே.ஆர். ஆட்சியானது கொழும்பில், சமாதானம் அதிகாரப்பகிர்வு என்பவை பற்றி TULF உடன் பேசிக்கொண்டே, மனித உரிமை மீறல் வன்முறைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வேளையில் சர்வதேச மக்கள் தொடர்புச் சாதனங்களினால் முன்வைக்கத் தவறிய சில அடிப்படையான விடயங்களை வெளியுலகுக்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

(1) ஜே.ஆர்., தான் உண்மையாகவே ஒரு தீர்வை வேண்டி நிற்பதாகவும், ஆனால் முன்னைய பிரதமரான திருமதி சிறீமாவோ பண்டாரநாயகாவின் சிங்கள இனவெறிச் சக்திகளும், SLFP யுமே தனது நல்ல நோக்கங்களுக்குத் தடையாக இருப்பதாகவும் காட்ட முற்படுகின்றார்.

தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் வெளிப்படையாகவே ஓர் அரசியற் தீர்வுக்காக அறைகூவல் விடுத்து ஊக்கத்துடன் செயற்பட்டு வந்த 300-க்கு மேற்பட்ட சமாதானம் விரும்பும் சிங்களவர்களை ஜே.ஆர். ஆட்சியானது கைது செய்து சிறைகளில் வைத்துள்ளது.

அதற்கு உதாரணமாக, இனங்களுக்கிடையிலான நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் (MIRJE) தேசிய அமைப்பாளரான திரு. ஜோ செனிவிரத்தின அவர்களை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் 5-ம் பிரிவின் கீழ் கைதுசெய்து சித்திரவதைகளுக்குட்படுத்திச் சிறையிலடைத்து வைத்துள்ளது.

ஜே.ஆர். உண்மையில் ஒரு நிரந்தரத் தீர்வை விரும்புவராக இருந்தால், அவர் சிங்கள இனவெறிச் சக்திகளுக்கு எதிராகவும், புதிய வலதுசாரி பயங்கரவாத இயக்கமான 'கறுப்புச்சட்டை இயக்கத்'திற்கு (இந்த இயக்கமே TULFஐச் சேர்ந்த சூசைதாசன், SLMPஐச் சேர்ந்த விஜயகுமாரணதுங்க, LSSPஐச் சேர்ந்த கொல்வின் ஆர்.டி. சில்வா மற்றும் தமிழ் வர்த்தக நிறுவனங்களுக்கு எதிராகக் கைக்குண்டுகள் வீசப்பட்ட சம்பவங்களுக்குப் பொறுப்பாகும்) எதிராகவும் போராடுவதற்கு, சமாதானம் விரும்பும் சிங்கள மக்களையும் செயலூக்கமுடையோரையும் சித்திரவதை செய்தல்— சிறையிலடைத்தல் என்பவற்றை நிறுத்திவிட்டு **அவர்களின் உதவியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.**



(2) ஜே.ஆர். மலையகத் தமிழர்களினது நாடற்ற நிலைமையினை தான் தீர்த்து விட்டதாக உலகுக்குக் காட்ட முற்படுகின்றார். இது உண்மையல்ல.

சிறீமாவோ—சாஸ்திரி ஒப்பந்தத்தில் கீழ் சிறீலங்கா பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் செய்ய முடியாத மலையக மக்களை, ஜே.ஆரின் தற்போதைய நாடற்றோர் சம்பந்தப்பட்ட சட்டமானது உள்ளடக்காததன் காரணமாக இன்னும் நாடற்ற மக்கள் குறிப்பிடத்தக்களவு பெருந்தொகையாக உள்ளனர்.

அதுமட்டுமல்லாது மலையக மக்களுக்குப் 'பிரஜாவுரிமை' என அழைக்கப்படும் விடயமானது, அவர்களைப் பாரபட்சப்படுத்தும் சட்ட ஒழுங்காகவே இருந்து வருகின்றது. ஏனெனில் மலையக மக்கள், தலைமுறை ரீதியான பிரஜாவுரிமைக்குள் உள்ளடங்காமல் 'பதிவு செய்யப்பட்ட' வகையான குடியுரிமை என்பதற்குள்ளேயே கொண்டு வரப்படுகின்றனர். ஆனால், அவர்கள் மூன்று தலைமுறைகளுக்கு மேலாகத் தொடர்ச்சியாகச் சிறீலங்காவில் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

மேலும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நூற்றுக்கு மேற்பட்ட மலையகப் பெருந்தோட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு சிறையிலடைக்கப் பட்டுள்ளார்கள்.

ஜே.ஆர்., திம்புப் பேச்சுவார்த்தைக் காலகட்டத்தை அப்பாவித் தமிழ்மக்கள் மீது இனப்படுகொலைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்காகத் தனது ஆயுதப் படைகளைக் கட்டியெழுப்பும் நோக்குடன் பயன்படுத்திக் கொண்ட எமது கடந்தகால அனுபவத்தையும், சமாதானம் விரும்பும் தமிழ்-சிங்கள மக்கள் மீது திட்டமிட்ட ரீதியில் அடிப்படை மனித உரிமைகள் மீறும் நடவடிக்கைகளையும், மட்டக்களப்பில் இரண்டு (பொலிஸ் விசேட கொமாண்டோ) முகாம்கள் (1. களுவாங்கேணி, 2. கல்முனை) கடந்த வாரம் திறக்கப்பட்டமையையும் கவனத்தில் கொண்டு நாம், ஜே.ஆரின் உண்மையான உள்நோக்கங்கள் தொடர்பாகச் சந்தேகம் கொள்கின்றோம்.

க. பத்மநாபா
(க. பத்மநாபா)
**செயலாளர் நாயகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.**

## ஈழப்போராட்டத்தில் இந்தியாவின் பாதுகாப்பும் இணைந்துள்ளது.

*வட இந்தியாவில் அதிகமாக விற்பனையாகும் ஹிந்தி வாரப்பத்திரிகையான 'தினமான்', தனது 27 ஜூலை-2 ஆகஸ்ட் இதழில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா அவர்களையும், மத்திய கமிட்டி உறுப்பினர் தோழர் சுரேஷ் அவர்களையும் பேட்டி கண்டு பிரசுரித்துள்ளது. அதிலிருந்து சில பகுதிகள் :*

**கேள்வி :** *சிறீலங்கா அரசு ஈழப்பிரச்சினை சம்பந்தமாக அனுப்பிவைத்த பிரேரணை பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?*

**தோழர் நாபா :** எங்களைப் பொறுத்தவரை, இவ்விடயத்தில் சிறிலங்கா அரசிடம் எந்த நேர்மையும் இருப்பதாகத் தெரியவில்லை. சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதுபோல நடிக்கிறது. உள்நாட்டில் அவ்வரசுக்கு ஏற்பட்ட நிர்ப்பந்தமும், உலக நாடுகள்-குறிப்பாக இந்தியாவின் நிர்ப்பந்தமும், தமிழ்ப் போராளி இயக்கங்களின் வலுவான தாக்குதலும், சிறீலங்கா இராணுவக் கொடுரங்கள் குறித்து உலகம் முழுவதும் எழுந்துள்ள கண்டனமுமே சிறீலங்கா அரசை 'பேச்சுவார்த்தை' என்னும் நிலைமைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது.

**கேள்வி :** *தமிழ்ப் பகுதிகள் யாருடைய ஆதிக்கத்தில் இருக்கின்றன? சிறீலங்கா இராணுவத்தின் நிலை என்ன?*

**தோழர் சுரேஷ் :** கடந்த மே மாதம் சிறீலங்கா அரசு, தனது இராணுவ பலத்தினால் ஈழப்போராளிகளை முறியடிக்க விரும்பி அதற்கான முற்சிகளையும் மேற்கொண்டது. ஏனென்றால் யாழ்குடா நாட்டுக்குள் ஈழப் போராளிகள் கையே மேலோங்கியிருக்கிறது. யாழ்ப்பாணப் பகுதிக்குள் சிறீலங்கா அரசு 9 முகாம்களை நிறுவியுள்ளது. இந்த முகாம்களை விட்டு இராணுவத்தினர் வெளியே வரமுடியாதவாறு ஈழப்போராளிகளினால் சூழப்பட்டுள்ளது.

**கேள்வி :** *சிறீலங்கா இராணுவம் வெற்றியடையவில்லை என்று கூறுகிறீர்களா?*

**தோழர் சுரேஷ் :** ஆமாம், முகாம்களை விட்டு வெளியேற முயற்சித்ததில் அவர்களுக்கு ஒரே ஒரு இலாபம்தான் ஏற்பட்டிருக்கிறது. புதிதாக இரண்டு தற்காலிக இராணுவ முகாம்களை (மண்டைதீவு, வசாவிளான்) அவர்கள் அமைத்துக் கொண்டனர். ஆனால், அவைகளும் ஈழப்போராளிகளினால் சூழப்பட்டுள்ளது.

**கேள்வி :** *இவ்வாறு சூழ்ந்து கொளவதால் உங்களுடைய வெற்றி எவ்வாறு உறுதிப்படுகிறது?*

**தோழர் சுரேஷ் :** நாங்கள் முற்றுகையிடுவது மற்றைய இயக்கங்களின் போக்கிலிருந்து மாறுபடுகின்றது. எங்களது ஆயுதப் பிரிவான மக்கள் விதலைப் படையின் சிறு பகுதியை எந்நேரமும் இராணுவ முகாம்களைச் சுற்றிக் காவலுக்கு நிறுத்தி வைக்கிறோம். இன்னொரு பிரிவினர் எங்கள் சொந்தத் தயாரிப்பான மோட்டார் (MORTAR) களை எடுத்துச் சென்று அவ்வப்போது முகாம்களுக்குள் செல்களை ஏவுகின்றனர். முகாமுக்குள் இராணுவத்தினரிடையே குழப்பம் ஏற்படுகிறது. ஆத்திரமுற்று வெளியேறத் தொடங்குகிறார்கள் . இந்தச் சமயத்தில் முகாமைச் சுற்றிக் காவலுக்கு நிற்கும் எமது தோழர்கள், கைவெடிகுண்டுகள் எறிந்து வெடிக்கச் செய்வதோடு வயர்லஸ் மூலம் எங்கள் படை முகாமுக்குத் தகவல் அனுப்புகிறார்கள். பிறகு, எங்கள் படை அவர்களைத் தாக்கத் தொடங்குகிறது. இதனால் இராணுவத்தினர் திரும்பவும் முகாமுக்குள் ஓடிவிடுகிறார்கள். தொடர்ந்து, விமானத்தின் மூலம் குண்டுகளை வீச ஆரம்பிக்கின்றனர்.

**கேள்வி :** *மற்ற இயக்கங்களுடன் கருத்து வேறுபாடு இல்லாமல் நீங்கள் இயங்க முடியாதா?*

**தோழர் நாபா :** இதில் எங்களின் அனுபவம் என்னவென்றால், இந்த மாதிரி சமயங்களில் இராணுவத்தினரை எதிர்ப்பதற்கு அனைத்து இயக்கங்களும் ஒன்றாகவே செயற்படுகின்றன.


**கேள்வி :** *உங்கள் போர்த்தந்திரம் என்ன? அரச நிர்வாகம் புகமுடியாத இடங்களில் உங்கள் நிர்வாகம் நடைபெற எப்படிச் சாத்தியமாகி[illegible]றது?*

**தோழர் சுரேஷ் :** எங்கள் முதல் நோக்கம் தமிழ்ப் பகுதிகளை வலுப்படுத்துவது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாமல் ஈழத்தின் ஏனைய பகுதிகளான கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மலையகம் ஆகிய எல்லா இடங்களிலும் பரவலாக எங்கள் செயற்பாடுகளை இணைத்துக் கொள்வது. பிறகு கெரில்லாத் தாக்குதலைப் பலப்படுத்துவது. சர்வதேச முற்போக்கு சக்திகளின் உதவியுடன், சிறீலங்கா அரசின் பாசிசக் கொள்கையை அம்பலப்படுத்துவது.

பொதுவாக ஈழப்பகுதிகளில் அரச நிர்வாகம் சீர்குலைந்திருக்கிறது. நாங்களாகவே நிர்வாகத்தை இயக்க முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறோம். எல்லாவிதமான வேலைகளையும் மக்களின் ஒத்துழைப்போடு பூர்த்தி செய்கிறோம்.

**கேள்வி :** *ஈழப்போராளிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள யுத்தத்தால் தெற்காசியா எவ்வாறு பாதிக்கப்படுகிறது?*

**தோழர் நாபா :** இலங்கைக்குள் நடக்கும் போராட்டத்தில் பல சர்வதேச சக்திகள் இயங்குகின்றன. பாகிஸ்தான் சிறீலங்கா அரசுக்கு கொடுக்கிறது. தென்ன■ாபிரிக்கா, இஸ்ரேல் நாட்டு உளவாளிகள் இதில் பங்கு கொண்டு இயங்குகிறார்கள். இங்கிலாந்தின் S.A.S நிறுவனம் சிறீலங்கா இராணுவத்திற்கு ஆலோசனை வழங்கி வருகின்றது. இதனால் இந்துமாகடல் பிராந்தியத்தின் அமைதிக்கும் பங்கம் ஏற்பட்டுள்ளது. இந்த உண்மையை சர்வதேச அரசியலைப் புரிந்து கொண்டுள்ள எந்த மாணவனும் அறிவான். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் நிலைமையைப் பாழாக்கும் விதத்திலேயே ஏகாதிபத்திய வல்லரசுகள் இலங்கையைப் பயன்படுத்துவதால், ஈழவிடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் பாதுகாப்பும் பின்னிப்பிணைந்துள்ளது. இதனால் இந்தியா, ஈழப் போராளிகளாகிய எங்களுக்குக் கைகொடுக்க வேண்டும் என்று விரும்புகின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒய்யாரக்கொண்டையாம் தாழம்பூவாம்

சொர்க்க புரியாகவும் சொகுசு தேசமாகவும்
தன்னைச் சுயபிரகடனம் செய்கிற
(விளம்பர) வெளிச்சம் போட்டு வெளியே தெரிகிற
அமெரிக்காவை—
உள்ளே போய் அலசிப் பார்ப்பவர்களுக்கு
உண்மையின் கொடூரம் ஓங்கி முகத்தில் அறைகிறது.
அந்த நாட்டைப் பற்றிய சில புள்ளிவிபரங்கள்
அவலட்சணம் எழுதிய முகத்தைத் திருப்பி
அதிர்ச்சி தருவதாய் அமைகிறது.




அமெரிக்காவில்—
காரில் வேலைக்குப் போகிற கனவான்களோடு
வேலை எதுவுமின்றி வீதியில் நிற்கிற
ஒன்றரைக் கோடி இளைஞர்களையும் காணமுடியும்
இதைத்தவிர கணக்கில் சேராத
வேலையிழந்த தொழிலாளர்கள் 45 லட்சம்.
அங்கே - பத்துக் கோடிப் பேர் வரையில்
வாழ்வதற்குப் போதாத வருமானத்தைக் கொண்டு
தாங்களும் வாழ்வதாகப்
பேர் பண்ணிக் கொண்டிருப்பவர்கள்.
முதலாளிகளும்
அவர்களது தலைவன் ரீகனும்
அரசு நிர்வாகம் மூலம் வரைந்து வைத்திருக்கிற
வறுமைக் கோட்டிற்குக் கீழே
அந்தோ 3.85 கோடி அமெரிக்கர்கள்!


சிறுபான்மை இன மக்களை ஒடுக்குவதில்...
எதிர்த்தால் மிருகத்தனமாக அழித்தொழிப்பதில்
சிறிலங்காவுக்கு,
அதன் கூட்டாளி அமெரிக்காவும் சளைத்ததல்ல.
(கயவரைக் கயவரே காமுறுவர் போலும்).
அங்கே அமெரிக்கக் கறுப்பரை அடக்கியாளும்
ஏகாதிபத்திய
வெறிபிடித்த வெள்ளை ஆட்சி.

உலகிலே சிறந்த ஜனநாயகநாடு அமெரிக்காதானாம்!
சொல்லிக் கொள்கிறார்கள்.
(அமெரிக்காவும் அதன் தாசன்களும் சொல்கிறார்கள்..)
உண்மையில் அந்த ஜனநாயகம் யாருக்கு?
அங்கே பசியால் வாடும்
18000000 வறிய மக்களுக்கா?
அல்லது அந்த ரீகனின் நாட்டிலே
கொடிய வறுமைக்குட்பட்டு
வறுமை,
எழுத்தறிவின்மை,
கொத்தடிமைகளாக உள்ள
1.7 கோடி குழந்தைகளுக்கா?



அமெரிக்கா போன்ற நாடுகளில்
வசதியாக வாழ்பவர்கள் மத்தியில்தான்
ஜனநாயகமும் வாழும் போலும்!
சுரண்டுபவர்களுக்கெல்லாம் சுதந்திரம்
போதாதா?
நாலைந்து பேராகத்தான் இருக்கட்டும்
இலட்சாதிபதி கோட்டிற்கு
மேலே ஏறி நிற்பவர்களைத்தானே
வெளியே தெரியப் போகிறது.

இந்தப் புள்ளிவிபரங்களைக் கவனியுங்கள்:
ஒவ்வொரு 24 நிமிடத்திற்கும் ஒரு கொலை
ஒவ்வொரு 7 நிமிடத்திற்கும் ஒரு கற்பழிப்பு
51 வினாடிகளுக்கொருமுறை 1 கொள்ளைக்காரத் தாக்குதல்
10 வினாடிகளுக்கொருமுறை ஒரு திருட்டு
ஆண்டுதோறும்—
1.5 கோடிப் பேர் தமது உடைமைகளைக்
கொள்ளை கொடுக்கிறார்கள்.
28 ஆயிரம் பேர் கொள்ளையர்களால்
கொலையுண்கின்றனர்.
2.8 கோடிப் பெண்கள்
தாக்குதலுக்குள்ளாகின்றனர்.
இவை யாவும்
ஏதோ சர்வாதிகார நாடொன்றில் நடப்பவையல்ல.
ரீகனின—
'சுதந்திர'
'சுபிட்சமான'
'ஜனநாயக' நாடான
அமெரிக்காவில்தான் நடக்கிறது.



"முதலாளித்துவமானது தனது சவக்குழியைத்
தானே தோண்டிக் கொள்கிறது"
என்றார் கார்ல் மார்க்ஸ்.
ஏகாதிபத்தியமாக வளர்ந்திருக்கும்
அமெரிக்க முதலாளித்துவமானது
தொழிலாளர்களைப் பிழிந்து ரத்தம் குடித்தே
கொழுப்பேறித் திரிகிறது.
ஆகாயம் வரை கிளைபரப்பி
ஆதிக்கம் செலுத்துகிற அமெரிக்கா
தனது ஆணிவேருக்கு இழைக்கிற அநீதி—
கொடுமையானது மட்டுமல்ல குரூரமானதும்கூட
தொழிற்சாலைகளில் போதிய
பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால்
ஆண்டுதோறும்
ஐம்பது லட்சம் தொழிலாளர்கள்
வேலை செய்யும் இடங்களிலேயே
காயமடைகின்றனர்; இவர்களில்
ஒன்றரை லட்சம் பேர் ஊனமடைகின்றனர்
கொல்லப்பட்டு விடுவதோ 18 ஆயிரம் பேர்!

"கொக்கய்ன் நல்ல போதைப் பொருள்;
குளுமையான போதைப் பொருள்"
என்று குஷியோடு சொல்கிற
16, 17 வயதுப் பையன்களை
அங்கு பார்க்கலாம்.
12-17 வயது வரையுள்ள 40 லட்சம்
இளம்பிள்ளைகள் உட்பட
நாலரைக் கோடிப் பேர்
போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள்.
'ஹெரோயின்' போதை மருந்தை
ஊசி போட்டுக் கொள்ளாமல்
உயிர் வாழ முடியாத நிலையில்
17லட்சம் அமெரிக்கர்கள் உண்டாம்.
சிறுபிள்ளைகள் சம்பந்தப்பட்ட
பாலுறவுக் குற்றங்கள்...
குப்பையாக நீலப்படங்கள்...
தாராளமான ஆபாச விற்பனை...
'எய்ட்ஸ்' வரையிலான நோய்களின்
உற்பத்திக் கூடம்...
ஓ! அமெரிக்கா!
செல்வக் கொழிப்பின் மறுபுறத்தில்
படுநாசச் சீரழிவு-சீழ்வடியும் கலாச்சாரம்.

அதிகரித்துவரும் வேலையில்லாத் திண்டாட்டம்
வறுமை
வளர்ந்துவரும் குற்றச் செயல்கள்
போதைமருந்துப் பழக்கம்
கள்ள வியாபாரம்
விபசாரம்
மற்றும் பிற கொடுமைகள் வக்கரிப்புகள்
இவை யாவும் சேர்ந்து குடும்பத்தில்—
விரக்தி
சீரழிவு
குடும்ப உறவுகள் அறுபடுதல்...
இதனால் 'விவாகரத்து' என்பது
வீட்டுக்கு வீடு 'வாசற்படி' என்பது போலாக—
மறுபுறம் வீட்டைவிட்டு ஓடிப்போகும்
வாலிபங்களின் தொகையும் அதிகரித்து
அந்தரங்கத்தில் அமெரிக்கா
அசிங்கப்பட்டுப் போயிருக்கிறது.

வழிப்பறி என்பது
சாதாரண வாழ்க்கைமுறையாகிப் போயிருப்பதால்
அமைதியைப் பறிகொடுத்த அமெரிக்க மக்கள்
வாழ்வைத் தேடி
வக்கிரங்களோடு அலைந்து கொண்டிருக்கிற நிலைமை
மனோதத்துவ சிகிச்சையாளர்களை நாடுவோர்
ஆண்டுதோறும் 2,50,00000 பேர்
4 கோடிப் பேருக்கு
மனநோய் சிகிச்சை தேவைப்படுவதாக
அமெரிக்க அரசுக்கு அபிப்பிராயம்.
பொருளாதாரச் சிக்கல்
பெருமளவிலான ஏற்றத்தாழ்வு
சூழ்நிலை இறுக்கம்
இவற்றால் தற்கொலை செய்து கொள்வோர்
ஆண்டுதோறும் 30 ஆயிரத்துக்கு மேலாக.

உழைத்துப் படைப்பவர்களென்றும்
உண்டு கொழுப்பவர்களென்றும்
வாழும் உரிமையைப் பாரபட்சப்படுத்தி
அதை நியாயப்படுத்துகிற அமெரிக்காவின்...
குற்றங்களின் கூடாரமாகியிருக்கிற
அமெரிக்காவின்
சிறைக்கூடங்களை
6 லட்சம் கைதிகள் நிரப்புகின்றனர்.
ஒவ்வொரு வாரத்திலும்
சிறையை விட்டு வெளியே வருபவர்களைக் காட்டிலும்
உள்ளே செல்பவர்களின் தொகை
300 பேர்களாக அதிகமாயிருப்பதாக
அரசின் அங்கலாய்ப்பு வேறு.
ஆனால்—
குற்றச் செயல்களும்
பொருளாதாரத் தேக்கமும் அதிகரிக்க
அமெரிக்கா, சிறைகளைக் கட்டும் மும்முரத்திலேயே
இப்போதும் இருந்து வருகிறது.

முதலாளித்துவச் சமுதாய அமைப்புக்குள்
தொல்லைகளைச் சுமந்துகொண்டிருக்கிற
உழைக்கும் அமெரிக்கப் பெரும்பான்மை மக்கள்
ஒன்றுபட்டு எழுந்து
பகட்டுகளை உடைத்துப் படைக்கப் போகிற
பாட்டாளிகளின் அரசுதான் அவர்களை விடுவிக்கும்.
ஆமாம்—
அமெரிக்கா தன் அவலட்சணத்தை மாற்ற
ஆபரேஷன் செய்துகொள்ள வேண்டும்.

## உள்ளே இருக்குதாம் ஈரும் பேனும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# பக்கங்கள்

நாம் வீரம் செறிந்த காலத்தில் வாழ்கிறோம். கதைகள் படிக்க விரும்பும் நமது வருங்காலச் சந்ததிக்கு, நமது காலத்தின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காவியமாய் அமையப் போகிறது. மாமன்னர் கீர்த்தனைகளையும் தெய்வத்திருவிளையாடல்களையும் புராணங்களாய்க் கேட்டுப் புளித்துப்போன காதுகளுக்கு, விடுதலையை நோக்கி வீரநடை போடுகிற இந்த நாட்கள் அவர்களது விருப்பத்துக்குரிய கதைகளாய் இருக்கப் போகின்றன. புதிய உலகைச் சூல் கொண்டிருக்கும் இந்த நாட்கள் வருங்கால மக்கள் மனதை கொள்ளை கொள்ளும் நினைவுகளாய் அமையும்.

போர்ப் பீரங்கிகளைவிட வலுமிக்கதும், நவீனகரமானதும் EPRLF இன் சொந்தத்தயாரிப்புமான மோட்டார் (MORTAR) களுடன் சென்ற ஒருபிரிவுத் தோழர்கள் முகாமைச் சுற்றி வசதியான இடங்களில் மோட்டார்களை நிலைப்படுத்திக் கொண்டனர்.

இயந்திரத் துப்பாக்கிகளோடும் கைக்குண்டுகளோடும் சென்ற மற்றைய தோழர்கள், ஒவ்வொரு பிரிவாகத் தத்தமக்குக் குறிக்கப்பட்ட இடங்களில் நிலை எடுத்துக் கொண்டனர்.







## பக்கம் 1

### வைகாசி மாதத்தில் நிலவு ஓய்வெடுத்துக் கொண்ட ஒருநாள் இரவில்—

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப் பிரிவான மக்கள் விடுதலைப்படை (PLA) யைச் சேர்ந்த தீரமிகு தோழர்கள், கிழக்கு மாகாணத்திலுள்ள கிராமம் ஒன்றில் இரகசியமாகச் சந்தித்தனர்.

மட்டக்களப்பு-புல்லுமலை இராணுவ முகாமைத் தாக்கி அங்கிருக்கும் அரசபடையினரின் ஆயுதங்களைக் கைப்பற்றித் திரும்புவதற்கென வகுத்திருந்த கெரில்லாப் போர் முறைத் திட்டத்தினை மீண்டும் ஒரு முறை சரிபார்த்துக் கொண்டனர்.

தாக்குதலின்போது ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய பங்கினை வரிசைக்கிரமமாக ஞாபகப்படுத்திக் கொண்டனர்

அதன் பின்னர்,

குறித்த ஒரு நேரத்தில் புல்லுமலை இராணுவ முகாமைச் சுற்றி, தாக்குதலுக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு படைப்பிரிவினரும் சென்றடைய வேண்டிய இடங்களை நோக்கி கலைந்து சென்றனர்.

புல்லுமலை முகாமுக்கு ஏனைய இராணுவ முகாம்களிலிருந்து தரை மார்க்கமாக எவ்வித உதவிகளும் வந்துவிடாதபடி ஏனைய மக்கள் விடுதலைப் படைப் போராளிகள், சாலைகளில் கண்ணிவெடிகளைப் புதைத்து விட்டுக் காத்திருந்தனர்.

தாக்குகின்ற இலக்கினுள்ளே பொதுமக்கள் யாரும் வந்து விடாதபடி சில தோழர்கள் காவல் புரிந்தனர்.

நேரம் நள்ளிரவைத் தாண்டியாயிற்று.

எங்கும் நிசப்தமான சூழ்நிலை.

இரவின் அமைதியை மட்டுமல்ல, தூங்கிக் கொண்டிருந்தோரின் காதுச் சவ்வுகளையும் கிழித்து விடுவது போன்ற திடீர்ச் சத்தம் ஒன்று முழங்கியது.

ஆம்! முகாமைத் தாக்கச் சென்ற போராளிகள் அனைவருக்கும், தாக்குதலை ஆரம்பிப்பதற்குச் செய்யப்பட்ட சைகையான - மோட்டாரின் முதல் முழக்கம் அது.

தொடர்ந்து அந்தப் பிரதேசமே கிடுகிடுக்கும்படியாக மக்கள் விடுதலைப் படையின் மோட்டார்கள் முழங்கின.

முகாமிற்குள் அதிக ஆயுதங்களோடும், அதிக எண்ணிக்கையோடுமிருந்த இராணுவத்தினர் திடீர்த் தாக்குதலினால் பீதி கொண்டு உள்ளுக்குள்ளேயே நாலாபுறமும் சிதறி ஓடியதைக் காணமுடிந்தது.

விளக்குகள் அணைந்தன.

எங்கிருந்து தாக்குதல் வருகிறது என்பதை அனுமானிக்க முடியாத சிறீலங்கா படையினர் கண்டபடி சுட ஆரம்பித்தனர்.

ஆனால்—

மக்கள் விடுதலைப் படையினரின் 80mm, 100mm மோட்டார் குழாய்களினுள்ளிருந்து புறப்பட்ட அதிபயங்கர குண்டுகள் முகாமுக்குள் விழுந்து பேரிடியுடன் தீப் பிழம்புகளைக் கக்கின.

முகாம் கட்டிடங்கள் யாவும் தகர்க்கப்பட்டுத் தரை மட்டமாகின.

அந்த வெளிச்சத்தில் வெளியே ஓடிவந்த இராணுவத்தினரை, போராளிகளின் இயந்திரத் துப்பாக்கிகளிலிருந்து சீறிய குண்டுகள் மாய்த்தன.

17 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே பலியாகினர்; 20க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

பல இராணுவத்தினரை இன்னும் காணவில்லை என அடுத்த நாள் அரசு செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

மக்கள் விடுதலைப் படை போராளிகளில் ஒரு தோழருக்கு ஏற்பட்ட சிறு காயங்களைத் தவிர வேறு இழப்புகள் எதுவுமின்றி வெற்றிகரமாக ஆயுதங்களைக் கைப்பற்றித் திரும்பினர்.

திட்டமிட்டபடி புல்லுமலை முகாமை முற்றாகத் தகர்த்து விட்டு வெற்றி வீரர்களாய்த் திரும்பிய ஈழப் போராளிகளை மட்டுநகர் மக்கள் சந்தோச மிகுதியால் ஆரவாரித்து வரவேற்றனர்.

வடபகுதியில் மட்டுமே ஈழப்போராளிகளின் பாரிய தாக்குதல்களைச் சந்தித்து வந்த அரச படையினர், கிழக்கு மாகாணத்திலும் ஈழப் போராளிகளின் உக்கிரமான தாக்குதலைச் சந்திக்க நேர்ந்ததில் ஏற்பட்ட பீதியால், ஈழப்பிரதேசம் எங்கும் இனித் தமக்கு அஞ்சி வாழும் நிலையே ஏற்பட்டிருப்பதாக உணர்ந்துள்ளனர்.

## பக்கம் 2

### மற்றொருநாள் பகல் நேரம் மன்னாரில்—

'ட்ரக்'குகளில் வந்தால் ஈழப்போராளிகள் அடையாளங் கண்டு கொண்டு தாக்குவார்கள் என்ற பயத்தில், மன்னார் முந்திரிகைத்தோட்டம் என்னும் இடத்தில் உழவு யந்திரம் ஒன்றில் விவசாயிகள் போல் வேடமணிந்து டிராக்டர் பெட்டி நிறைய ஆயுதங்களுடன் வந்து கொண்டிருந்த இராணுவத்தினரை, அவ்வீதியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தொடரும்...

காவலுக்கு நின்றுகொண்டிருந்த EPRLF இன் மக்கள் விடுதலைப் படை (PLA) போராளிகள் வழிமறித்துத் தாக்கினர்.

குறிப்பிட்ட இடத்தில் இராணுவத்தினர் வழிமறிக்கப்பட்ட செய்தி கிடைத்த உடனேயே ஏனைய பகுதிகளிலிருந்த மக்கள் விடுதலைப் படையினர் மோட்டார்களுடன் ஸ்தலத்துக்கு விரைந்தனர்.

முற்றிலும் நவீனகரக ஆயுதங்களுடன் அந்த இடம் குருக்ஷேத்திரமாகியது.

ஈழப்போராளிகளின் உக்கிரமான தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் இராணுவத்தினர் பின்வாங்க நினைத்தனர்.

ஆனால்—



குறிவைத்து இயக்கப்பட்ட மோட்டார் குண்டுகள் இராணுவத்தினரின் உழவுயந்திரத்தைத் தூளாகச் சிதற வைத்தது.

17 இராணுவத்தினர் பலியாகினர்.

உடைந்து போகாமல் தப்பியிருந்த இராணுவ ஆயுதங்களை எடுத்துக் கொண்ட PLA தோழர்கள்,

தொடர்ந்தும் அவ்விடத்திலேயே மறைவாகப் பதுங்கியிருந்தனர்.

சுமார் இரண்டு மணி நேரங் கழித்து—

ஹெலிகொப்டரில் இராணுவத்தினர் அவ்விடத்தைப் பார்வையிட வந்தனர்.



ஹெலிகொப்டரை அவ்விடத்தில் இறக்க முற்பட்டனர்.

ஹெலிகொப்டரை தூரத்தில் கண்ட மாத்திரத்திலேயே மக்கள் விடுதலைப் படையினர் அதை எதிர்கொள்ளத் தயாராயினர்.

> 'ஈழப்போராளிகள் வசம் தரையிலிருந்து ஆகாயத்தை நோக்கிச் செலுத்தப்படக் கூடிய ஏவுகணைகள்(சாம்) இருக்கின்றன என்று எங்களுக்குத்தகவல் கிடைத்திருக்கிறது.'
>
> 'ஈழப்போராளிகள் நுட்பமான விமான எதிர்ப்புப் பீரங்கிகளை வைத்திருப்பதால் விமானப்படை விமானங்கள் 900 மீட்டர் உயரத்திற்கும் மேலாகப் பறக்கின்றபோதும் மிகுந்த ஆபத்தை எதிர்நோக்குகின்றன.'
>
> —03.09.86 அன்று யாழ்பாணத்தில் வெளிநாட்டு நிருபர்களிடம்... சிறீலங்கா இராணுவ அதிகாரி பிரிகேடியர் ஜி.எச்.டி. சில்வா

EPRLF இன் சொந்தத்தயாரிப்பான 'தாஸ்கிராக்' (DASS KRAK) என்னும் விமான எதிர்ப்புப் பீரங்கியினை PLA தோழர்கள் துரிதமாகத் தயார் நிலைக்குக் கொண்டுவர—

ஹெலிகொப்டர் சமீபத்தில் பறந்து வரவும் சரியாக இருக்கவே......

விமானத்தைக் குறிவைத்துப் புறப்பட்ட மக்கள் விடுதலைப் படையின் DASS KRAK வானத்தில் முழங்கியது.

தப்பித்துக் கொண்ட ஹெலிகொப்டரில் கிலி கொண்ட இராணுவத்தினர் திரும்பிப பறந்து கொண்டிருந்தனர்.

**பக்கம் 3**

**திருகோணமலை மாவட்டம், சாம்பல் தீவில்—**

பத்துக்கு மேற்பட்ட வாகனங்களில் அணிவகுத்து வரிசையாக வந்துகொண்டிருக்கும் சிறீலங்கா இராணுவத்தினரை மக்கள் விடுதலைப் படையினர் எதிர் கொள்ளுகின்றனர்.

பலத்த தாக்குதல் ஆரம்பமாகிறது.

உயிரைத் திருணமென மதித்துப் போராடுகின்ற ஈழப்பேராளிகளின் கெரில்லாப் போர் முறைக்கு ஈடுநிற்க முடியாமல் தத்தளிக்கின்றனர் இராணுவத்தினர்.

வாகனங்கள் நொருக்கப்படுகின்றன.

9 இராணுவத்தினர் கொல்லப்படுகின்றனர்; பலர் படுகாயமடைந்தனர்.

மீதியுள்ளோர் பின்வாங்கினர்.

மக்கள் விடுதலைப் படை அடுத்த தாக்குதலுக்குத் தயாராகின்றது.

**பக்கம் 4**

**மண்டைதீவில்—**

திடீரென்று வெறி பிடித்தவர்களாகக் கறுப்புச் சட்டையணிந்த இராணுவத்தினர் வீடுவீடாகப் புகுந்து வெட்டியும் அடித்தும் வெளியே இழுத்து வந்து சுட்டும் கொலை வெறியாடியதில் மக்கள் அதிர்ந்து போயிருந்தனர்.

கடற்கரையோரமாக மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் பிணமாக்கப்பட்டு கடலில் மிதந்தனர்.

கடலில் மிதந்த சடலங்களை எல்லாம் பொதுமக்களின் உதவியோடு கரைசேர்த்த PLA தோழர்கள்,

சடலங்களை அடக்கம் செய்வித்தபின்,

கொதித்துப் போயிருந்த மனநிலையோடு ஓரிடத்திற் கூடினர்.



மண்டைதீவு இராணுவ முகாமைத் தாக்கி, அங்கிருக்கும் வெறியர்களுக்குத் தகுந்த பாடம் கற்பிப்பதென மண்டைதீவுப் பகுதியிலுள்ள PLA தோழர்கள் திட்டமிட்டுக் கொண்டனர்.


அடுத்த நாளிரவு—

மண்டைத்தீவு இராணுவ முகாம் மீது மோட்டார்ப் பீரங்கிகள் முழங்கின...

ஆக்ரோஷமாய்ப் போரிட்டபடி முன்னேறினர் ஈழப்போராளிகள்.

அடுத்த நாள் காலையிலேயே,

19 கறுப்புச் சட்டை இரா



ணுவத்தினர் கொலை செய்யப்பட்டதாக சிறீலங்கா அரச வானொலி அலறியது.

மக்கள் விடுதலைப் படையினர் சேதமெதுவுமின்றிப் பாதுகாப்பாக தமது இருப்பிடங்களுக்குத் திரும்பியிருந்தனர்.

**பக்கம் 5**

**முல்லைத்தீவில்—**

முகாம்களை விட்டு வெளியேறிய இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகளை நோக்கி நடைபவனியாகவும், கவச வாகனங்களிலுமாகச் சென்று கொண்டிருக்கின்றனர்.

EPRLF இன் மக்கள் விடுதலைப் படைக் காவல் தோழர்களிடமிருந்து முல்லைத்தீவுப் பகுதி PLA தலைமை நிலையத்திற்குச் செய்தி பறக்கிறது.

தொடர்ச்சி 11ம் பக்கம்...

www.tamilarangam.net



# இருள் விலகும் இனிப் புது உலகம்

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்;
தருமம் மறுபடி வெல்லும், எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகங் கற்கும்
வழிதேடி விதி இந்தச் செய்கை செய்தான்;
கருமத்தை மேன்மேலும் காண்போம். இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம்; காலம் மாறும்.
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்.
தனு உண்டு காண்டீபம் அதன் பேர்" என்றான்
— சுப்பிரமணிய பாரதி

ஈழவிடுதலைப் போராட்டத்தில் புரட்சிகரமான புதியதோர் ஒளி, தன்னைச் சிறிது சிறிதாக வெளிக்காட்டி படிப்படியாக பேரொளியாக மேலெழுந்து வருகின்றது.

இருள் படர்ந்த சூழ்நிலைகள் கலைக்கப்பட்டு வருகின்றன. மறைந்திருந்த கொடூரங்கள் மக்களின் பார்வைக்குப் பகிரங்கமாகின்றன. அந்த நம்பிக்கைகள் விதைத்திருந்த மாயைகளின் முகத்திரைகள் கிழிக்கப்படுகுன்றன.

உண்மையை நோக்கி ஈழப்போராட்டம் உருண்டு கொண்டிருக்கின்றது. உண்மைக்கும் கவர்ச்சி மாயைகளுக்குமிடையிலான போராட்டத்தில் உண்மையானது வெற்றியடைந்து கொண்டிருக்கின்றது.

ஜனநாயகத்திற்கும் இராணுவ சர்வாதிகாரத்திற்கும் இடையிலான போராட்டத்தில் ஜனநாயகம் தன்னிலையை மேலும் மேலும் திடப்படுத்திக் கொண்டிருக்கிறது.

முற்போக்கு சக்திகளுக்கும் பிற்போக்கு சக்திகளுக்கும் இடையிலான போராட்டத்தில் முற்போக்கு சக்திகள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இதுவரை காலமும்
புரட்சி,
வர்க்கம்,
சோசலிசம்,
பொதுவுடமை.....
போன்ற வார்த்தைகளை ஈழப்போராட்டத்தில், பிற்போக்கு சக்திகள் கூட தங்கள் நலன்களைக் காத்துக் கொள்ள, தங்களைப் பலப்படுத்திக் கொள்ள, புரட்சிகர சக்திகளை முறியடித்திட பயன்படுத்திக் கொண்டிருந்தன.
ஏன் இன்னும் அவை கைவிட்டு விட்டன என்று சொல்வதற்கில்லை.

ஆனால் -
ஏமாற்றப்பட்டிருந்த மக்கள் உண்மையை இனங்காணத் தொடங்கி விட்டார்கள். எதிரியின் கொடூரத்தால் உள்வீட்டுக்குள் வளர்ந்து கொண்டிருந்த பாம்புப் புற்றுகளை இன்று அடையாளங் காணத் தொடங்கிவிட்டார்கள்.

## உண்மைகள் உறங்குவதில்லை

உண்மையை நோக்கி மக்கள் நகரத் தொடங்கி விட்டதனால், பாசிசப் போக்குகளுக்கு எதிராகத் தங்கள் கருத்துக்களை மக்கள் உரத்துக் கூறத் தொடங்கிவிட்டதனால்,

பொய்யுக்கும் புளுகளுக்கும் மக்கள் கட்டுப்பட மறுத்துவிட்டதனால்...

மிருக வேஷம் போட்டு மக்கள் மத்தியில் சாகஸ வேலைகள் காட்டி மயக்கி வந்தவர்கள் இன்று உண்மையாகவே மிருகமாகித் தங்கள் பற்களை மக்கள் மீதும் பதிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

துப்பாக்கித் துரைத்தனங்களால் மக்களை அடக்கி ஒடுக்கி விடலாமென்று யாரும் நினைத்தால்

அது கனவாகவே போய் முடியும்.

ஏனைய இயக்கங்களின் வீரர்களை தனித்தனியாகக் கடித்துக் குதறியபோது மக்கள் யாரும் தட்டிக் கேட்கவில்லை.

சொந்த இயக்கத்துக்குள்ளேயே பலரை அடையாளம் தெரியாமல் அழித்தபோது எவரும் கொதித்தெழுந்து விடவில்லை.

ஒரு விடுதலை இயக்கத்தின் தலைவர் உட்பட நூற்றுக் கணக்கானவர்களைப் படுகொலை செய்த போதும் எவரும் தடுத்து நிறுத்தவில்லை.

> ...உள்முரண்பாடுகளை முறியடிப்பதற்கும் காலதாமதம் செய்வதற்கும், ஏனைய இயக்கங்களோடு முரண்பாடுகளை வளர்த்துக் கொள்வது-அவற்றோடு போர் தொடுப்பது என்பது புலிகளின் தலைமைக்கு இயல்பான வழி முறையாகியுள்ளது...

தொடர்ச்சியான இந்தப் போக்குகளில் பழக்கப்பட்டுவிட்டதில் ஏற்பட்ட நம்பிக்கைகளினால் -

எவரையும்,

எந்த இயக்கத்தையும்,

எந்தப் பகுதி மக்களையும்

துப்பாக்கி கொண்டு அடக்கிவிடலாம் அழித்துவிடலாம் என்று எவருக்காவது எண்ணம் ஏற்படுமேயானால்,

அது பகற்கனவாகவே முடிவடையும்.

புரட்சிகர சக்திகளை எவரும் எந்தத் துணை கொண்டும் அடக்கிவிட - அழித்துவிட முடியாது என்பது, வரலாறு தெரிந்த நாள் நாள்தொட்டு காலம் காலமாக நிரூபிக்கப்பட்டு வரும் உண்மையாகும்.

## புலிகளின் போராட்டக் கடமை?

ஈழமக்கள் புர்ட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த முக்கியமான உறுப்பினர்களைப் படுகொலை செய்வதற்குப் பட்டியல்கள் தயாரிக்கப் பட்டு விட்டனவாம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மீது பரந்துபட்ட யுத்தம் ஒன்றை மேற்கொள்ளுவதற்குத் திட்டங்கள் போடப்பட்டு விட்டனவாம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செய்து வந்துள்ள குற்றங்கள் என்ன என்பனைப் பட்டியல் போட்டு விளக்கும் புத்தகம் கூட தயாரிக்கப்பட்டு விட்டதாம்.

யார் இதைச் செய்திருக்கிறார்கள், என்று கேள்வி எழுப்பத் தோன்றுகிறதா?

சிறீலங்கா அரசோ அதன் இராணுவமோ அல்ல.

பின்னர் வேறு யார் என்று கேட்கிறீர்களா?



'எமது சுதந்திரத்தை இழப்பதை விட அனைத்தையும் தியாகம் செய்ய நாம் தயார்
ஒருபோதும் நாம் அடிமைப்படோம்!'

அது வேறு யாருமல்ல.

'தமிழீழ விடுதலை'ப் புலிகள்தான்.

பத்திரிகையாளர்கள், இப்படியான முயற்சிகள் நடந்து கொண்டிருப்பது உண்மைதானா என்று கேள்வியையும் எழுப்பி அவ்ர்களே பதிலையும் கூறுகிறார்கள்:

மக்கள் மத்தியிலே பரவலாகக் குசுகுசுவென்று பேசப்படுகின்ற செய்தியும் இதுதான்.

இதனால் ஈழமக்கள் மத்தியிலே அச்ச உணர்வு நிலவுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியமான உறுப்பினர்கள் சிலர் தங்களுக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் அந்தச் செய்தியைப் பரிமாறிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆக மொத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அடுத்த கடமை?......

ஈழமக்கள் மத்தியில் ஜனநாயகத்தின் சின்னமாக,

ஈழவிடுதலையின் வழிகாட்டியாக,

உழைக்கும் மக்களின் முன்னணிச் சக்தியாக,

புரட்சிகர சக்திகளின் ஒருங்கிணைப்பாக விளங்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மீது மாசு கற்பித்து விடலாமென்று யாராவது முனைந்தால்,

அதனை அழித்து விடலாமென்று நினைத்தால்...

ஒஹோ - அப்படியா சங்கதி!

அமெரிக்க ஏகாதிபத்தியத்தினாலேயே முடியாமற் போன காரியத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் முயற்சித்துப் பார்க்கப் போகின்றார்களா?

**உண்மை செருப்பணிந்து புறப்படுவதற்குள் பொய் உலகைச் சுற்றி வந்துவிடுகிறது.**
**-யாரோ**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தொடுக்க நினைக்கும் யுத்தமானது -



கடற்போரில் வீரமரணமடைந்த
மக்கள் விடுதலைப் படையின் மட்டுநகர்ப் பிராந்தியத் தளபதி தோழர் **ரஞ்சித்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஜனநாயகத்தையும் சோஷலிசத்தையும் அழித்து விட பாசிசம் நினைத்ததற்கு ஒப்பாகும்;

புரட்சிகர சக்திகளை அழித்துவிட எதிர்ப் புரட்சிகர சக்திகள் முனைவதற்கு ஒப்பாகும்;

முற்போக்கு சக்திகளை அழித்துவிட பிற்போக்கு சக்திகள் முயல்வதற்கு ஒப்பாகும்.

பாசிஸ்ட்டுகள் ஜனநாயகத்தையும் சோஷலிசத்தையும் வென்றதாய்ச் சரித்திரமே இல்லை.

புரட்சிகர சக்திகளை எதிர்ப் புரட்சிகர சக்திகள் அடக்கி ஒடுக்கி விட்டதாயும் வரலாறு இல்லை.

ஈழமக்கள் மத்தியிலுள்ள பிற்போக்கு சக்திகளின் பிரதிநிதியாக,

ஜனநாயக விரோத சக்திகளின் சின்னமாக,

எதிர்ப் புரட்சிகர கும்பலாக

தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மை உருவமைத்துக் கொண்டிருக்கின்றன. இதே வேளை, விடுதலைப்புலி உறுப்பினர்களுக்குள்ளேயே ஜனநாயகத்திற்கும் பாசிசத்திற்கும் இடையிலான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; புரட்சிகரப் போக்குகளுக்கும் எதிர்ப் புரட்சிகரப் போக்குகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும்மேலும் உக்கிரமாகிக் கொண்டிருக்கின்றன.



'எங்கள் ஆயுதக் கரங்களுக்கு-
மார்க்சிய லெனினிய அடிப்படையிலான ஒரு தெளிவான அரசியல் கண்ணோட்டம் வழிகாட்டுகின்றது;

உள்முரண்பாடுகளை முறிபடிப்பதற்கும் காலதாமதம் செய்வதற்கும், ஏனைய இயக்கங்களோடு முரண்பாடுகளை வளர்த்துக் கொள்வது - அவற்றோடு போர் தொடுப்பது என்பது பூலிகளின் தலைமைக்கு இயல்பான வழிமுறையாகியுள்ளது.

தலைமையின் ஜனநாயக விரோதப் போக்குக்கு எதிரான உணர்வோடு ஒடுக்கப்பட்ட நிலையில் புலிகளுக்கு உள்ளேயே இருக்கும் உண்மையான ஈழப்போராளிகள் படிப்படியாக ஜனநாயகத்தை நோக்கி வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

'கூலிக்குத் துதிபாடும் குமாஸ்தாப் புரட்சியாளர்கள்' புலிகளுக்கு உள்ளேயும் வெளியேயும் EPRLF க்கெதிரான விரோத உணர்வை புலிகளின் உறுப்பினர்கள் மத்தியிலும், அதன் ஆதரவாளர்கள் மத்தியிலும் விதைத்து வளர்ப்பதற்கு அதிதீவிரமாக முயன்று கொண்டிருக்கிறார்கள்.

EPRLF மீது முன்கூட்டியே மாசு கற்பிப்பதற்கும் அதை மக்கள் மத்தியில் விதைப்பதற்கும் கடுமையாக முயற்சிக்கின்றார்கள்.

## 'புலி நடவடிக்கைகளின் எதிர் விளைவு —புரட்சிகர சக்திகளின் ஐக்கியம்.

இதேவேளை இன்னுமொரு விடயம்.

சிறிலங்கா அரசின் இராணுவ ஒடுக்குமுறைகள் பூதாகாரமாக விஸ்தரிக்கப்பட்டபொழுது, ஈழமக்கள் மத்தியில் ஆங்காங்கே பல குழுக்கள் தோன்றித் தனித் தனியாகத் தாமும் ஈழவிடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டு செயற்பட்டனர்.

இருந்து வந்த பெரிய இயக்கங்கள் மீதான நம்பிக்கையீனம் காரணமாகவோ...

கருத்து வேறுபாடுகள் காரணமாகவோ...

அதிதீவிரவாதத்தின் மீதான ஈடுபாட்டின் காரணமாகவோ...

> 'இன்றைய சர்வதேச சூழ்நிலைகளில் ஒரு தேச மக்கள் எவ்வளவு பலவீனராயிருப்பினும் மார்க்சிய லெனினியக் கட்சித் தலைமையின் கீழ், சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் வெற்றிபெற, தீர்மானமாய்ப் போராட ஒன்றுபட்டு எழுந்துவிட்டால் எந்த ஆக்கிரமிப்பாளனையும் தோற்கடிக்கக் கூடிய ஆற்றல் அவர்களுக்குக் கிடைத்துவிடும்.'
>
> —ஹோ சி மின்

இவ்வாறு வெவ்வேறு காரணங்களினால் சுயமான குழுக்கள் பல இயங்கி வந்தன.

எந்த ஒரு தனிமனிதனுக்கும் தான் கொண்ட கருத்தின் அடிப்படையில் தனியாகவோ குழுவாகவோ, சிறிதாகவோ பெரிதாகவோ செயற்படும் ஜனநாயக உரிமை உண்டு என்பதனை EPRLF எப்போதும் அங்கீகரித்து வந்திருக்கிறது.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் TELO வுக்கெதிரான யுத்தத்தைத் தொடுத்ததைத் தொடர்ந்து

ஈழப்போராட்டத்தில் இயங்கி வந்த வளரும் நிலையிலிருந்த குழுக்களுக்கெதிரான யுத்தத்தையும் தொடுத்தது;

அவற்றிடமிருந்து ஆயுதங்களைத் தட்டிப் பறித்துக் கொண்டது;

அவற்றின் உறுப்பினர்களைக் கண்ட இடங்களில் படுகொலை செய்தது;

அக்குழுக்கள் தொடர்ந்தும் செயற்படக் கூடாதென அவற்றின் ஜனநாயக உரிமையைப் பறித்துக் கொண்டது.

இவற்றின் விளைவு...

புரட்சிகர சக்திகளுக்கு இடையிலான ஒருங்கு திரண்ட ஐக்கியம் என்பது, ஒரு தேசிய விடுதலைப் போராட்ட காலகட்டத்தில் எவ்வளவு தூரம் முக்கியமானது என்பதனை, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள்



அது-
நம் நாட்டைக் காப்பதற்கும்,
புரட்சிகர பலன்களைப் பெற்றுக்கொள்வதற்குமாக

அனைத்து ஜனநாயக புரட்சிகர சக்திகளுக்கும் உணர்த்தியிருக்கின்றன.

## 'புலிகளின் சமாதான சபைகள்!

எச்சரிக்கையுடன் கண்காணிக்கப்பட வேண்டிய இன்னுமொரு விடயமும் முன்னால் வந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாண மாவட்டத்தின், பல ஊர்களில் ஆயுதமுனையில் பழைய மக்கள் சபைகள், சங்கங்களைக் கலைத்துவிட்டுப் புதிய சமாதான சபைகளைக் கட்டி வருகின்றார்கள்.

பழைய மக்கள் சபைகளுக்கும் புலிகளின் புதிய சமாதான சபைகளுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை அவதானியுங்கள்.

சிறிலங்கா இராணுவம் யாழ் மாவட்டத்தில் முகாம்களுக்குள் அடக்கப்பட்டதைத் தொடர்ந்து சிறிலங்கா அரசின் பொலிஸ், நீதிமன்றம், சிறைச்சாலை என்பன செயலிழந்தன.

இதைத்தொடர்ந்து, யாழ்ப்பான மாவட்டத்தில் ஊர்கள் தோறும் உள்ளூர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 'மக்கள் சபைகள்' வெவ்வேறு பெயர்களில் தன்னியல்பாகவே உருவாகின.

விடுதலை இயக்கங்கள் அவற்றிற்குத் துணையாக நின்றன.

விழிப்புக் குழுக்கள்' அல்லது 'இணக்க சபைகள்' என்ற பெயரில் உருவாகிய மக்கள் சபைகள் குறிப்பிடத்தக்களவு சுயமான போக்கினைக் கடைப்பிடித்தன.

பாரபட்சமான நிலைமைகள் ஒப்பீட்டு ரீதியில் மிகக் குறைவாக இருந்தன.

சாதிப்பாகுபாடுகளுக்கிடையில் சமரசம் காணும் தன்மையினை அவை கொண்டிருந்தன.

அதேவேளை, ஏழை-பணக்காரன் என்னும் நிலைமைகள் மக்கள் சபை விடயத்தில் முக்கியத்துவமற்றவையாக இருந்தன.

ஆனால்-

அந்த மக்கள் சபைகளை ஆயுதமுனையில்

> ...ஆயுதங்கள் என்பது வெறும் கருவியே. அவற்றின் கவர்ச்சியில் அடிமையாகிப் போனவர்கள் ஆதிக்க வர்க்கத்திடமிருந்து ஒருநாளும் விடுதலை பெற மாட்டார்கள்...

கலைத்துவிட்டுப் புதிய சமாதான சபைகளைக் கட்டி வரும் புலிகள்,

தங்களுடைய உண்மையான சொரூபத்தை இப்போது காட்டத் தொடங்கியிருக்கின்றன.

புதிய சமாதான சபைகளின் உறுப்பினர்களாக யார் யாரை புலிகள் அமைத்து வருகிறார்கள்?

அதற்கு இலக்கணம் இதுதான்.

ஒன்று, பண நில மற்றும் சொத்தாதிக்கம் உடையவராக ஊரில் இருத்தல் வேண்டும்.

இரண்டு, உயர்சாதித் திமிர் பிடித்தவராக இருத்தல் வேண்டும்.

மூன்று, அடிதடியாட்களைக் கொண்டு மக்களை அடக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

நான்கு, மேற்கண்ட மூன்று குணாம்சங்களோடு விடுதலைப் புலிகளின் திட்டவட்டமான ஆதரவாளராக இருத்தல் வேண்டும்.

எப்படி இருக்கிறது. விடுதலைப்புலிகளின் புதிய 'சமாதான' சபைகள்?

சாதிபேதமற்ற,

சுரண்டலற்ற

ஏழை-பணக்காரன் வேறுபாடற்ற,

சுரண்டலற்ற

புலிகளின் 'சோஷலிசத் தமிழீழம்' இப்போது எங்கே போயிருக்கிறது?

காளி வேடம் போட்டு தெருக்கூத்தாடிய புலிகளின் கோரப்பற்கள் இப்போது வெளியே தெரிகின்றன.



நாம் நடத்தும் போராட்டத்தில் எங்களை வெற்றிக்கு இட்டுச் செல்லும்.

## ஜே.ஆர். பேசுவதும் சோஷலிசமே!

இது ஒன்றும் எங்களுக்குப் புதிதல்ல.

ஏனென்று சொன்னால்,

ஹிட்லரும் சோஷலிசம் பேசித்தான் ஜெர்மனியின் ஆட்சியைக் கைப்பற்றினான் என்பதனை நாம் வரலாற்றில் பல தடவைகள் படித்துவிட்டோம்.

இப்பொழுதாவது ஒன்றைப் புரிந்து கொள்வீர்கள் என்று நாம் நினைக்கிறோம்.

எவ்வளவுதான் இராணுவக் கவர்ச்சியை ஒரு இயக்கம் கொண்டிருந்தாலும், எத்தனைதான் பிரச்சாரச் சாதனைகளை ஒரு இயக்கம் மேற்கொண்டாலும், ஈழதேசத்தின் விடுதலையை வென்றெடுத்தல்-அதில் ஜனநாயகத்தை நிலைநாட்டி சமதர்ம சமுதாயத்தை உருவாக்குதல் என்பது சற்று வேறுபட்ட விடயமாகும்.

உழைக்கும் மக்கள் தளத்தில் வளராமல்,

உழைக்கும் வர்க்க உணர்வு பெற்ற புரட்சிகரப் பேராளிகளாக வளர்ச்சியடையாமல்,

விமர்சனம் சுயவிமர்சனத்தால் செழுமையடையும் ஜனநாய-மத்தியத்துவத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட புரட்சிகர ஸ்தாபனமாக இல்லாமல்

புரட்சி என்பது இல்லை;

உழைக்கும் மக்களுக்கு விடுதலை என்பது இல்லை; அவர்கள் சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவது என்பது சாத்தியமில்லை.

ஆயுதங்கள் என்பது வெறும் கருவியே.

அவற்றின் கவர்ச்சியில் அடிமையாகிப் போனவர்கள் ஆதிக்க வர்க்கத்திடமிருந்து ஒரு

... . தொடர்ச்சி 10ம் பக்கம்.

www.tamilarangam.net




# கண்ணீரால் காத்தோம்-யாரும் கருக்கச் சம்மதியோம்.

*பிற்போக்கு சக்திகள்-மிதவாதிகள் என்ற போர்வையில், போராடிக் கொண்டிருக்கிற மக்கள் சார்பாக எதிரித் தரப்பினரோடு பேச்சு வார்த்தை நடத்துவது எவ்வளவு தவறானதும், ஆபத்தானதுவும் என்பதை இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி உட்பட உலகநாடுகளில் பெரும்பாலானதலைவர்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள். தென்னாபிரிக்க விடயத்தில் அதை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளார்கள்.*

அன்புள்ள அமிர் அவர்களுக்கு,
உங்களைப் பார்த்து ரொம்ப நாளாயிற்று.

பாவம் மக்கள்! ஈழமக்கள் இன்னும் முற்றாக மறந்து விடவில்லை. செய்திகளில் உங்கள் பெயர் அடிபடுகிறபோதெல்லாம், மறந்து போன உங்கள் முகத்தைப் பழையபடி ஞாபகத்திற்குக் கொண்டு வரப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள்தான் 83 ஜூலைப் படுகொலைகளோடு தமிழகத்திற்கு ஓடிப்போனவர், பிறகு இந்தப் பக்கம் வரவே இல்லையே! (இடையில் ஒரு தடவை வந்து போனீர்களே! மக்கள் அதை மறந்தே போய்விட்டார்கள்.) அவ்வப்போது கொழும்புக்கு வருவதும் டில்லிக்குப் பறப்பதுமாக அமையும் உங்கள் நடவடிக்கைகளைக் கேள்விப்படு கிற நமது மக்கள், நீங்கள் ஈழமக்கள் சார்பாகத்தான் யார் யாருடனெல்லாமோ பேசுகிறீர்கள் என்பதறிந்து வாய்விட்டுச் சிரிக்கிறார்கள். உங்களின் நிலை!... பெரிய பரிதாபம்...




1977-ம் ஆண்டு தேர்தலில் ஈழமக்களின் பெரும்பான்மை ஓட்டுகளைப் பெற்று கிடைத்த உங்கள் பாராளுமன்ற அங்கத்துவப் பதவிக் காலம் 1983 உடன் இயல்பாகவே முடிந்து போகிறது.

இப்போது 86-யிலும் எந்த அவசியத்தின் அடிப்படையில் பயன்படுத்திக் கொள்ள முற்படு கிறீர்கள் என்பது நமக்குப் புரியாத புதிராகவே இருக்கிறது.

ஆயுதந்தாங்கிய ஈழவிடுதலை இயக்கங்கள் இல்லாமல் அமிர்தலிங்கம் கூட்டணிக்குப் பேச்சு வார்த்தை நடத்துகிற தகுதியோ அல்லது பேச்சு வார்த்தையின் பின்னான ஏதோ ஒரு முடிவை அமுலாக்குகிற ஆற்றலோ இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

ஆனால், அமிர் கூட்டணி இல்லாமல் பேச்சு வார்த்தை நடத்துவதோ, ஈழவிடுதலையைப் பெற் றுக் கொள்வதோ ஆயுதந் தாங்கிய ஈழவிடுதலை இயக்கங்களால் முடியக்கூடிய செயல் என்கிற போது, அமிர்தலிங்கம் கூட்டணிக்கு வழங்கப்படு கிற பெறுமதியும் முக்கியத்துவமும் எந்த அடிப் படையிலானது என்று பலரும் கேட்கிறார்களே!

அமிர் அவர்களே, நீங்கள் அதற்கு என்ன பதில் வைத்திருக்கிறீர்கள்?

போட்டும், இதைக்கவனியுங்கள். தென்னா பிரிக்க மக்களின் போராட்டத்தினை மழுங்கடிக்க தென்னாபிரிக்க நிறவெறி அரசோடு சமரசங்காண முயல்கிற தென்னாபிரிக்க மிதவாத பிற்போக்கு சக்திகளின் முயற்சிகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

தென்னாபிரிக்க வெள்ளை அரசோடு பேசி உறவுகளைப் பேணிக் கொள்வதன் மூலம் தமது வர்க்க நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள முற்படுகிற தென்னாபிரிக்கப் பிற்போக்கு சக்திகளை உலகம் முழுவதுமே கண்டிக்கிறது.

தென்னாபிரிக்க அரசானது எந்த விடயத்தை யும், அங்கு போராடிக் கொண்டிருக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரசுடன் (ANC) மட்டும் தீர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர, அங்குள்ள மிதவாதி களோடு பேசுவதை அங்கீகரிக்க முடியாது என இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி உட்பட பெரும்பாலான உலக நாடுகளின் தலைவர்களும் கண்டித்ததைப் பார்த்திருப்பீர்கள்.

அதைப்போலவே—

ஈழப்போராட்டத்தை முறியடிக்கும் நோக்கோ டு, அதேசமயம் TULF ஆனது சிறீலங்கா அரசோடு தான் கொண்டுள்ள வர்க்க உறவுகளைப் பேணிக் கொள்வதற்காக நடத்தும் பேச்சுக்களை ஒருபோதும் உலகம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

TULFக்கும் ஈழமக்களுக்கும் இடையில் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக எவ்விதத் தொடர் பும் இன்றிப் போய்விட்டது என்பதையும், உங்கள் கூட்டணிக்கு ஈழத்தில் மக்கள் என்ன நினைக்கிறார் களென்பது தெரியாது என்பதையும் சற்றுப் பொறுமையோடு யோசித்துப் புரிந்து கொள்வீர் களானால்... ஈழமக்களின் இன்றைய நிலைப்பாட் டைத் தெரிந்து கொண்டு நான் சொல்லும் விடயங்களிலுள்ள உண்மையைக் கண்டு கொள்வீர் கள் (உண்மை உங்களுக்கு எரிச்சலூட்டுவதாயிருந் தால், அதற்கு முழுப்பொறுப்பும் நீங்களே).

தமிழக அரசின் விருந்தோம்பலில், குளிரூட்டப் பட்ட சொகுசு மாளிகையில் இருந்து கொண்டு தொலைபேசியிலேயே ஈழப்போராட்டத்தை நடத் தலாம் என்று நினைப்பது சுத்தப் பைத்தியக்காரத் தனம் என்பதை (தயவு செய்து ஆத்திரப்படாமல்) உணருங்கள்.

உங்களை நன்கு புரிந்து கொண்டுள்ள ஜே.ஆர். ஏதோ ஒரு ஒப்பந்த அடிப்படையில், உங்களை மேலும் குளிர்விக்க விரும்புவதை நாம் அறிவோம்.

குளிர்பானங்கள், குளிரூட்டப்பட்ட கார், குளி ரூட்டப்பட்ட வீடு... இவைமட்டுமல்ல, ஜே.ஆர்., உங்களது கடந்த காலப் பதவிக்காக கடந்த மூன்று வருடங்களாகத் தரப்படாதிருக்கும் பாராளுமன்றச் சம்பளம் முழுவதையும் வழங்குவ தாகக் கூறியிருப்பதில், உங்களுக்குக் குளிர் ஜன்னி யே கண்டிருக்கும்.

என்ன துரதிஷ்டம் பாருங்கள்!

இப்போது தங்கள் போராட்டம் முழுவதும் அந்த மூன்று வருடச் சம்பளங்களைப் பெற்றுக் கொள்வதன்றோ! அதனால்தான் உங்களுக்கு நான் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. முடிந்தால் ஜே.ஆரிடம் போய்ப் பாராளுமன்றத் தேர்தலை நடத்தச் சொல்லி அதில் வெற்றி பெற்று நாற்காலிகளைப் பற்றிக் கொள்ள முடியுமா பாருங்கள்!

அல்லது, ஈழவிடுதலைக்காக ஆயுதமேந்திக் களத்தில் முடிவை எழுதிக் கொள்ளச் சித்தமாகி விட்ட ஈழப்போராளிகளுக்கு ஆதரவாகச் செயற் படுவதன் மூலம் விடுதலைக்கான நாளை விரைவு படுத்த உதவுங்கள்.

சும்மா குழப்பிக் கொண்டிராதீர்கள் (உவமை எல்லாம் எழுதி உங்களைப் புண்படுத்த மனமில்லை).

இப்படிக்கு

ஈழப்போராளி

## 9ம்பக்கத் தொடர்ச்சி... ...

நாளும் விடுதலை பெறமாட்டார்கள் என்று இதுகாலவரையும் சொன்னோம் - இப்போதும் சொல்கிறோம்.

ஆயுதக் கவர்ச்சிகளுக்கு கடந்த காலத்தில் நிறைய அடிமையானவர்கள்தான் அந்த ஆயுதங் களின் மிரட்டல்களுக்கும் அஞ்சுவார்கள்.



ஜனநாயகக் குரல்வளைகளை நசுக்க ஆயுதங் களைப் பயன்படுத்துபவர்களை எதிர்த்துப் போரா டுவது ஒவ்வொரு ஈழதேசபக்தனதும் கடமையாகி யுள்ளது.

அது சிறிலங்கா அரசாக இருந்தாலும் சரி! புலிகளாக இருந்தாலும் சரி!

### கிருதயுகம் எழுக மாதோ!

ஈழமக்கள் மத்தியில்,

அதிலும் மேலாக உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்கள் மத்தியில், அதற்கும் மேலாக சர்வதேச ஜனநாயக முற்போக்கு சக்திகளின் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற ஜனநாயக விரோத சக்திகளுக்கு எதிரான உணர்வு மேலும் மேலும் வலுவடைந்து வருகின்றது.

ஈழத்தின் தேசபக்த சக்திகள் அனைத்தும் தமக்கிடையிலான ஐக்கியத்தினதும், ஒருமைப்பாட் டினதும் தேவையை மேலும் மேலும் நன்குணர்ந்து வருகின்றார்கள்.

ஈழத்தின் புரட்சிகர சக்திகளை வலுப்படுத்த வேண்டுமென்ற உணர்வு சர்வதேச ஜனநாயக முற்போக்கு சக்திகளின் இடையே மேலும் மேலும் அதிகரித்து வருகின்றது.

*அன்பிற்கினிய தமிழ் மக்களே!*

உங்களுக்கு முன்னாலுள்ள வரலாற்றுக் கடமை களை அடையாளங் கண்டு கொள்ளுங்கள்.

ஒற்றுமைக்காக கைகோர்த்து நின்று உண்மை யாக உழைப்பவர்களைப் பலப்படுத்துங்கள்.

புரட்சிகர சக்திகளின் கரங்களை மேலும் வலுப்படுத்துங்கள்.

ஜனநாயக விரோத பிற்போக்கு சக்திகளை அம்பலப்படுத்துங்கள் - தூக்கி எறியுங்கள்.

## ஐயம் திரிபற

எங்கள் போராட்டம் பற்றி-
எமது அமைப்பு பற்றி
நீங்கள் தெரிந்து கொள்ள
கேள்விகளாக எமக்கு
அனுப்பி வையுங்கள்.
சுதந்திரத்திற்காகவும்
சுபிட்சமான வாழ்விற்காகவும்
ஆயுதமேந்திப் போராடிக் கொண்டிருக்கும்
ஈழதேச மக்களின்
போராட்ட முறைமை பற்றியும்
எமது அமைப்புப் பற்றியும்
சரியான, தெளிவான
தகவல்களைத் தருவதையும்
'ஈழப்போராளி' தனது
கடமையாகக் கருதுகிறது.

முகவரி :
ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்,
20, முதன்மைச்சாலை,
சக்காரியாக் குடியிருப்பு,
சூளைமேடு, சென்னை—600 094.

No. 20, Main Street,
Zackria Colony,
Choolaimedu,
MADRAS-94.

Tele Phone: 422620

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உண்மை வீரன்

**சோதனைக் காலகட்டத்தில் மனித சமுதாயத்தின் நன்மைக்காக தன்னால் முடிந்ததை எல்லாம் செய்கிறவன் வீரன்.**

உண்மையான வீரனது பண்புகள், நமது கற்பனையில் உருவாக்கப்பட்ட வீரனது பண்புகளோடு பொருந்துவதில்லை.

ஏன் அவ்வாறு பொருந்துவதில்லை?

கற்பனை வீரனது பண்புகள், உண்மையான வீரனை நேரில் அறிந்தவர்களால் சொல்லப்படுவதில்லை.

ஆனால், தன்னிடத்து வீரர்கள் இல்லாத, தன் சொந்த நலன்களுக்காக ஆதிகால வீரர்களை மறந்துவிட்ட ஒரு பிரிவினரால் ஆக்கப்பட்டது இவ்விலக்கணம்.

பொதுமக்களுக்காக இப்பண்புகளைக் கற்பிக்கும் இவ்வர்க்கம், உண்மை வீரர்களைக் கண்டு பயப்படுகிறது.

எனவே தன்பொருட்டு தனக்கு வேண்டிய முறையில் அது வீரர்களைப் படைக்கிறது. இத்தகைய சமூகத்தில் மனிதர் உயிர்களைக் காப்பாற்றியவர்களுக்கு நன்றிதான் செலுத்தப்படுகிறது; ஆனால் சேனைத் தலைவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

ஆனால், உண்மை வீரமும் உலகில் நிலவுகிறது; உண்மை வீரம் என்பது வெறும் கற்பனை அல்ல; வாழ்க்கையில் அது ஒரு முக்கிய அம்சம்.

வீரம் என்பது என்ன?

எவன் வீரன்?

வேகமாக ஓடுகின்ற நதியில் ஒருவன் மூழ்கிக் கொண்டிருக்கிறான். உதவிக்காக அவன் அலறுகிறான்.

இந்த ஆபத்திலிருந்து அவனைக் காப்பாற்ற யாரும் முன்வரவேயில்லையே என்று ஓலமிட்டுக்கொண்டு, பத்து இருபது பேர் கரையில் அங்குமிங்கும் ஓடுகிருர்கள்.

எப்படி அவனைக் கரையேற்றுவது என்று விவாதிக்கிறார்கள்.

கடைசியாக ஒருவன் நீரில் குதித்தான். ஆனால் நீரோட்டம் அவனை அடித்துக் கொண்டு செல்கிறது. அவன் உயிருக்கு மன்றாடுகிறான்.

இன்னொருவன் ஒரு படகை அவிழ்த்துவிட்டு எளிதாக அதிக அபாயம் இல்லாமல் தண்ணீரில் ஆழ்ந்து கொண்டிருக்கும் மனிதனைக் காப்பாற்றுகிறான்.

இவர்களில் யார் வீரன் என்று கேட்டால்-

படகு மூலம் காப்பாற்றிய மனிதனைத்தான் வீரன் என்று சொல்வோம்.

ஏனென்றால், தருணத்தில் எது அவசியமோ, அதை அவன் செய்தான். படகைப் பற்றி அவன் நினைக்காமல் இருந்தால் நீரில் தத்தளித்த மனிதன் கரை சேர்ந்திருக்க மாட்டான்.

(ஆனால், தண்ணீரில் குதித்த முதல் மனிதன், நீரில் ஆழ்ந்து கொண்டிருந்த மனிதனைக் கரை சேர்க்கா விட்டாலும் 'வீரன்' என்ற பாராட்டுக்கு உரியவன் ஆகிவிடுவான்.)

எனவே, இது சமயோசித புத்தியுடன் நடப்பதைப் பொறுத்திருக்கிறது.

அதாவது நிலமையை முற்றிலும் உணர்வதையும் அதைச் சமாளிக்கக் கூடிய வழிவகையையும் பொறுத்திருக்கிறது.

இவ்வாறு வீரம் என்று போற்றப்படுகிற விஷயம் சாதாரண நடைமுறைக் காரியமாக மாறுகிறது.

சோதனைக் கட்டத்தில் செய்ய வேண்டியதைச் செய்பவனே வீரன் என்று கூறலாம்.

ால்வியுற்ற நிலையில் ஈடு
முழுவதும் ஆதரவு ே
பமும் இஸ்ரேல், பாகிஸ்தவே
கு ஆட்சிகள் தமது இ
போகின்றன.

## 7ம் பக்கத் தொடர்ச்சி...

மக்கள் விடுதலைப் படை போராளிகள், இராணுவத்தினரை முல்லைத்தீவு-புதுக் குடியிருப்பு காட்டுப் பாதையில் வழிமறிக்கின்றனர்.

உக்கிரமான சண்டை மூள்கிறது.

அதிரடித் தாக்குதலில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மக்கள் விடுதலைப் படைப் பிரிவு, 7 இராணுவத்தினரைப் பலி கொள்கிறது. 25 இராணுவத்தினர் படுகாய முறுகின்றனர்

இராணுவத்தினருக்கு உதவ ஆகாய மார்க்கமாக ஹெலி கொப்டர்கள் வந்து குண்டு மழை பொழிகின்றன.

DASS KRAK விமான எதிர்ப்புப் பீரங்கிகளை நிமிர்த்தித் தொடர்ச்சியாக இயக்கி ஹெலிகொப்டர்களைத் துரத்தி விட்டுப் பாதுகாப்புத் தந்திரோபாயத்துடன் பின்வாங்கிக் கொள்கிறது மக்கள் விடுதலைப் படை.

**பக்கம் 6**

**யாழ்ப்பாணம்-வசாவிளான்**

முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினரை மக்கள் விடுதலைப் படையின் மோட்டார்த் தாக்குதற்பிரிவு சந்திக்கின்றது.

எதிர் நின்று தாக்குப்பிடிக்க முடியாமல் இராணுவத்தினர் திரும்பி ஓட-

PLA மோட்டார்ப் பிரிவினர் துரத்தித் துரத்தி ஓடுபவர்களை நோக்கி மோட்டாரிலிருந்து செல்களை ஏவுகின்றனர்.

ஓடிப்போய் முகாமினுள்ளே ஒளிந்து கொள்ளும் இராணுவத்தினரையும் நிம்மதியாய் இருக்கவிடாது, விட்டு விட்டுப் பல தடவைகள் முகாமை நோக்கி மோட்டார்த் தாக்குதலை நடத்துகின்றனர் ஈழப்போராளிகள்.

பல உயிரிழப்புகளுடன் வசாவிளான் முகாமைவிட்டுப் பின்வாங்கிய இராணுவத்தினர் மீண்டும் குரும்பசிட்டி என்னுமிடத்திலுள்ள தனியார் மருத்துவமனைக் கட்டிடம் ஒன்றில் முகாமிட்டு, அதைப் பலப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடும்போது—

EPRLF இன் மக்கள் விடுதலைப் படையினர் அப்புதிய முகாமைச் சுற்றி வளைத்து மிக உக்கிரமாகத் தாக்குகின்றனர்.

4 இராணுவத்தினர் கொல்லப்பட்டு மடைகின்றனர். மக்க

இத்தாக்குதலின்போது ஈழப்போராளிகள் மிகவும் நவீன ரக ஆயுதங்களைப் பயன்படுத்தியதாக சிறீலங்கா அரசின் 'லங்கா புவத்' செய்திஸ்தாபனம் (பல சமயங்களிலும் புளுகு ஸ்தாபனம்) கண்டு பிடித்துச் சொல்கிறது.

## 2ம் பக்கத் தொடர்ச்சி... ...

இதே வேளை இன்னொரு பக்க உண்மைகளையும் நாம் கண்டுகொள்ள வேண்டும் :

(1) சிறீலங்கா அரசாங்கம் தமிழர்கள் என்ற அடிப்படையில் இனப்படுகொலைகளைக் கட்டவிழ்த்து விட்டிருப்பதனால், தமிழ் பேசும் மக்கள் அனைவரிடையேயும் 'தமிழர்கள்' என்ற உணர்வே மேலோங்கி நிற்கிறது.

(2) கடந்த காலங்களில் தமிழ் பேசும் மக்களுக்கெதிரான இனக்கலவரங்கள் நடைபெற்றபோது அகதிகளாக்கப்பட்ட மலையக மக்கள், பாரம்பரிய தமிழர்களின் பிரதேசங்களுக்கே அனுப்பப்பட்டார்கள் — நகர்ந்தார்கள்.

(3) மலையக மக்களிலிருந்து இன்று எழுகின்ற புரட்சிகர சக்திகள், ஈழப்போராளிகளாகச் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு வரலாற்று வளர்ச்சி நிலைமைகளின் காரணமாக மலையகத் தமிழர்கள் யாழ்ப்பாணத் தமிழர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பு, சந்தேகம் என்பன மிகவும் தீவிரமாகக் குறைந்திருக்கின்றன.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் தாக்கம் மலையகத்திலும் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருவதனால், அவ்வேறுபாடு—பிளவு என்பது காலப்போக்கில் இல்லாமற் போகும் போக்குடையதாகவே தொழிற்படுகின்றது.



மக்கள் விடுதலைப் படை போரிடுகிறது.
பகைவனின் தளங்கள் தகர்கின்றன.
இறுதி வெற்றி வரை போராடுவதற்குத் தயாராய்-
இலக்கை நோக்கி உறுதியுடன் முன்னேறுகின்றனர்
ஈழப்போராளிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அந்தோ பரிதாபம்

சுயவிளம்பரக் கூச்சல்களால் தமிழக மக்களை ஏமாற்றி வருகிற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், இப்படியும் இலாபம் தேடிக்கொள்ள விரும்பி அம்பலப்பட்டுப் போயிருக்கிறது.





**தோழர் அமீன்**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படைப்பிரிவு ஒன்றின் லெப்டினண்ட்.

சர்வதேச விடுதலை இயக்கமொன்றின் போர்ப்பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றுவிட்டு நாடு திரும்பிய இவர், EPRLF இன் மக்கள் விடுதலைப் படை (PLA)யில், அதன் பிரிவு ஒன்றிற்குத் தலைமை தாங்கி சிறீலங்கா இராணுவத்தினர் கதிகலங்கும் வண்ணம் தாக்குதல்களைத் தொடுத்துக் கொண்டிருந்த நேரம்—

19.02.86 அன்று இரவு, யாழ் கோட்டை முகாமைத் தாக்குவதற்காகத் தோழர்களோடு இவர் தலைமை தாங்கிச் சென்று கொண்டிருந்த போது, நடுவழியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் திட்டமிடப்பட்ட முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

1981-ம் ஆண்டிலிருந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியோடு இணைந்து செயலாற்றி வந்த தோழர் அமீன்மட்டுவில்-சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

**தோழர் கடாபி**

EPRLF-மக்கள் விடுதலைப் படையின் ஆயுத உற்பத்திப் பிரிவில் முக்கிய பொறுப்பு வகித்தவர்.

EPRLFஇன் சொந்தத் தயாரிப்புகளில் ஒன்றான மோட்டார் (MORTAR)த் தயாரிப்பு நுணுக்கங்களில் கைதேர்ந்து பெருமளவு மோட்டார்களைச் செய்து குவிப்பதில் வெளிப்படுத்திய தனது உழைப்புத் திறனினால் ஏனைய தோழர்களிடத்தில் மதிப்பையும்-மலைப்பையும், ஈழப்போராட்டத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தாக்குதல் நடவடிக்கைகளை உறுதிப்படுத்தியதில் முக்கிய பங்கையும் பெற்றுக் கொண்டவர்.

21.03.86 அன்று நடுக்கடலில் கடற்படையினருடன் போரிட்டு வீரமரணமடைந்த 9 EPRLF போராளிகளில் ஒருவராக இவரும் நம்மைவிட்டுப் பிரிந்தார்.

1983-ம் ஆண்டிலிருந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் இணைந்து செயலாற்றி வந்த தோழர் கடாபி, நிலாவெளி-திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

மேலேயுள்ள EPRLF தோழர்களான அமீன், கடாபி ஆகிய இருவரினது புகைப்படங்களையும், EPRLF மூலம் ஈழப்பகுதிகளைப் பார்வையிட அழைத்து வரப்பட்ட வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒருவர் எடுத்துச் சர்வதேச சஞ்சிகை ஒன்றில் பிரசுரித்திருந்தார்.

மேலுள்ள இரு படங்களுடன் இன்னும் பல புகைப்படங்களும், EPRLF இன் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா அவர்களின் பேட்டியும், ஈழப்போராட்டம் பற்றியும், EPRFL இன் பங்களிப்பு பற்றியும் அச்சஞ்சிகை நாலைந்து பக்கங்களில் முக்கியத்துவம் தந்து பிரசுரித்திருந்தது. அதில் வெளியான படங்களில் மேலுள்ள இரு புகைப்படங்களையும் (தோழர் அமீன், தோழர் கடாபி ஆகியோரின் படங்கள்) இந்திய HINDU நிறுவனத்தின் வாராந்திர ஏடான FRONT LINE சஞ்சிகை ஜூலை 12-25 இதழில் மறுபடியும் பிரசுரித்திருந்தது.

இப்போது நடந்திருக்கும் பரிதாபகரமான வேடிக்கை என்னவென்றால்...

இந்தப் படங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏடு ஒன்று மீண்டும் பிரசுரித்து, தோழர் அமீனையும்,. தோழர் கடாபியையும் தங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் காட்டி விளம்பரம் தேட முற்பட்டிருக்கிறது.

EPRLF மீது கொண்ட பொறாமை வஞ்சத்தனத்தினால் தோழர் அமீனைச் சுட்டுக் கொன்ற அதே விடுதலைப் புலிகள்-சிறீலங்கா அரச படைகள் மீது மற்றைய இயக்கங்கள் செய்கிற தாக்குதல்களையும் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் மூலம் தாங்களே உரிமை கோரிக் கொள்வதைப் போன்று—வேறு சஞ்சிகைகள் பிரசுரித்த அமீன் தோழரின் புகைப்படத்தைத் தங்கள் பத்திரிகையில் மீண்டும் பிரசுரித்து, நவீன் ஆயுதங்களை மக்களுக்குக் காட்டி விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் மகிழ்வதாக வேறு கீழே எழுதித் தம்பட்டமடித்திருப்பதைப் பார்க்கும்போது, விடுதலைப் புலிகளின் சுயவிளம்பர ஆசை இப்படிக் கண்மண் தெரியாமலா தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றுவதாக அமைய வேண்டும்! என்கிற பரிதாப உணர்ச்சியே நமக்கு மேலிடுகிறது.

இதுமட்டுமில்லாமல் தோழர் கடாபியின் படத்தைப் பிரசுரித்து கீழே விடுதலைப் புலி உறுப்பினர் என்று எழுதியிருப்பதும், EPRLF தோழர்களான கமலும் சுதனும், அகதிகளை ஏற்றி வந்த படகிலிருந்து தங்களது சமயோசித நடவடிக்கை மூலம் கடற்படையினரைத் தாக்கி, அவர்களிடமிருந்து 32 அகதிகளையும் காப்பாற்றிக் கரை சேர்த்த சம்பவத்தை... விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கை என அதே பத்திரிகையில் புளுகி எழுதியிருப்பதும், விடுதலைப் புலிகள் எப்படி எப்படியெல்லாம் சுயவிளம்பரத்துக்காகச் சுழியோடுகிறார்கள் என்பதை அம்பலப்படுத்துகிறது.

இரவல் புடவையில் கொசுவம் வைத்துக் கட்டித் திரிந்த கதையாக ஏனைய இயக்கங்கள் செய்யும் தாக்குதல்களை—நல்ல முயற்சிகளை எல்லாம் தாங்களே செய்ததாக ஏழுதிப் பரப்பி பேர் வாங்கிக் கொள்வதற்கு விடுதலைப் புலிகள் பாடுபடுகிற—ஈடுபடுகிற பரிதாப முயற்சிகளை எல்லாம் பார்க்கிறபோது ஈழப்போராளிகளாகிய நாம் நினைக்கிறோம். *'பாவம் விடுதலைப் புலிகள்!'*





